விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

சகலவித பல் வியாதிகளையும்
போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின்
எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா
பற்பொடியை வாங்கும்
வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412

# ஈழநாடு
## வார மலர்
*THE EELANADU VARAMALAR*

'சிக்கனமே சிறந்த செல்வம்'
சிக்கன சலவைக்கு
மில்க்வைற் பார்சோப்
வாங்கி உபயோகியுங்கள்.
பெரிய அளவிலும், சிறிய
அளவிலும் விற்பனையாகிக்
கொண்டிருக்கின்றது. 10
மேலுறைகளை அனுப்பி
அழகிய
பொலித்தீன் பாக்கை
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 20 | கார்த்திகை 17 | முஹறம் 2 | ஞாயிற்றுக்கிழமை | (3—12—78) | இதழ் 293

சூறுவளி நிவாரண நிதியை நேரில் வழங்க

# தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.
# டிச. 7ல் இலங்கை வருகிறார்

## இரண்டு நாட்கள் அவர் இங்கு தங்கியிருப்பார்

(கொழும்பு)

**சூறுவளி வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்காக தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இம்மாதம் 7-ம் திகதி கொழும்புக்கு வருகிறார்.**

சிங்கப்பூரிலிருந்து இங்கு வரும் திரு. இராமச்சந்திரன் தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் உதவிகளுடன் தமது சொந்த நிதியிலிருந்தும் ஒரு தொகையை இலங்கை ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவிடம் கையளிப்பார்.

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் திரு. இராமச்சந்திரன் கொழும்பில் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்,

தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

இத்தவேளையில் தமிழக அரசு வழங்கும் 10 லட்சப் ரூபா பெறுமதியான அரிசி, சர்க்கரை, பிஸ்கட் ஆகிய பொருட்கள் நேற்று சென்னையிலிருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது,

இப்பொருட்களுடன் வரும் கப்பல் நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது,

## மட்டக்களப்பு சகஜநிலைக்குத் திரும்புகிறது

(மட்டக்களப்பு)

இயற்கையின் சீற்றத்தின் பின்னர் மட்டக்களப்பு நகரில் நேற்று மீண்டும் சில கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது.

நிவாரணப் பணிகளும் புனர்நிர்மாணப்பணிகளும் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மட்டக்களப்பு நகர் ஓரளவு சகஜநிலைக்குத் திரும்பியிருக்கிறது.

நேற்று நகரில் பல பஸ் சேவைகள் நடைபெற்றது. தூர இடங்களுக்கான பஸ் சேவைகளை இன்றுமுதல் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் உள்ள சிறிய பாதைகள் தவிர்ந்த ஏனைய பெரிய வீதிகளில் எல்லாம் இப்போது வழமைபோல் போக்குவரத்து நடைபெறுகிறது. (இ)

## வாகரைக்கு இன்னும் தொடர்பில்லை

(மட்டக்களப்பு)

சூறுவளியை அடுத்து வெள்ளத்தால் சூழப்பட்டு வெளி உலகுடன் தொடர்பற்றநிலையில் இன்றும் இருக்கும் வாகரைக்கிராமத்தில் பட்டினியுடன் இருந்த மக்களை விமானத்திலிருந்து அவதானித்த விமானப்படையினர் நேற்று அவர்களுக்கு ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலங்களை வழங்கினர். கல்குடாவில் இக்கிராமம் உள்ளது.

## மட்டக்களப்பில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்

(மட்டக்களப்பு)

அண்மையில் ஏற்பட்ட சூறுவளியாலும், பெருவெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் பொருட்டு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஒன்றை நேற்றுமுன்தினம் மட்டுநகரில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் திரு. கே சி நித்தியானந்தா தலைமையில் இக்கிளை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

தற்பொழுது பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, உடை, கட்டிடப் பொருட்கள், மருந்து வகைகள் முதலியவற்றை விநியோகிப்பதெனவும், இதுசம்பந்தமாகப் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று கிராம விபரங்கள் சேகரிப்பதற்கு ஒவ்வொரு குழுக்களும் ஒவ்வொரு இடங்களுக்குச்சென்று விபரங்கள் சேகரித்து அதன்படி உடனடி நிவாரணம் அளிப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இத்தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்திற்குப் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

திரு. மரியசிங்கம்-தலைவர், திரு. ஜீ. சி. ஏ. வாஸ் - செயலாளர் திருவாளர்கள் டாக்டர் ஆர். செல்லையா, டாக்டர் ஆர். கே. தியாகரர்சா. சுவாமி ஜீவானந்தாஜி, வணபிதா ஜோசேப் மேரி ஜோன் கோட்டன், டி.எஸ். கே. வணசிங்கா, ஆலாலசுந்தரம், த. கதிரவேற்பிள்ளை, சாம் சோமநாதர், ஜனுப் காதர், ரி பரமநாதன், ஆர். அம்பலவாணர், நல்லரட்ணம், உமாபதிசிவம்-உறுப்பினர்கள்.

இக்கழகத்தினருடன் தொடர்புகொள்ள விரும்புபவர்கள் செயலாளர், 41, மத்திய வீதி, மட்டக்களப்பு என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளலாம் என்று கேட்கப்பட்டுள்ளனர், (கா-இ)

### தேவை

யாழ்ப்பாணத்திற்கும் கோண்டாவில் இ போ. ச. டிப்போவுக்கும் இடையில் பலாலி வீதியில் பயிர்ச் செய்கைக்கு இரண்டு ஏக்கர் காணி தேவை. கற்பூமியாகவும் தொடர்புகொள்ளவும்.

யாழ். நகருக்கும், யாழ் வளாகச் சந்திக்குமிடையில் பலாலி வீதியில் வீடொன்று விலைக்குத் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல; 0949, C/o 'ஈழநாடு' லிமிட், யாழ்ப்பாணம்.

0949

## சமூகசேவைகள் அமைச்சர் கிழக்கு விஜயம்

(கொழும்பு)

சமூகசேவைகள் அமைச்சர் திரு அசோகா கருணாரத்ன நேற்று கிழக்கிலங்கையில் சூறுவளியினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் அங்கு மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளையும் நேரில் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பியுள்ளார். (இ)

## வழமைபோல் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு தற்போது வழமைபோல் நீர், மின்சாரம் வழங்கப்பட்டு வந்ததுபோல் கட்டுப்படுத்தப்பட்ட மின் விநியோகம் இனிமேல் இருக்காது என்றும் மின்சாரசபை யாழ் கிளை அறிவித்துள்ளது. (இ)

## சமூகக் குறைபாடுகள் ஒழிப்புக்குழு இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புக்குழு இன்று மாலை, கூட்டணிப்பணிமனையில் கூடவுள்ளது, கூட்டத்திற்கு சாவகச்சேரி எம். பி திரு வ ந நவரத்தினம்தலைமைவகிப்பார் கூட்டத்திற்கு தமிழ் இளைஞர் பேரவைப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர். (செ)

## வேலைக்குத் திரும்ப உத்தரவு

(கொழும்பு)

மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களில் உள்ள சகல அரசாங்கத்திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் கடமைக்குத் திரும்புமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது,

## மட்டக்களப்பில் கூட்டணி எம்.பிக்கள்

(மட்டக்களப்பு

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சூறுவளியினாலும், பெருவெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களையும் பாதிக்கப்பட்ட இடங்களையும் நேரில் கண்டறியும் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் மட்டு நகருக்கு வந்துள்ளனர்,

வவனியா எம் பி திரு ரி சிவசிதம்பரம், கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி, யாழ்ப்பாண எம் பி திரு வெயோகேஸ்வரன், மானிப்பாய் எம் பி திரு தர்மலிங்கம் ஆகியோரே இங்கு வந்துள்ளனர் இவர்கள் பாதிக்கப்பட்ட சில இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் உடனடி நிவாரணங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். மட்டக்களப்பு முதலாவது எம் பி திரு செ இராசதுரையும், பட்டிருப்பு எம் பி திரு பூ கணேசலிங்கமும் இவர்களுடன் சேர்ந்து நிவாரணப் பணிகளை நேரில் கண்காணித்து வருகின்றனர். [கா-இ]

## சபாஷ் கவாஸ்கர்

பம்பாய், டிச. 2

இந்திய-மேற்கிந்திய 1-வது கிரிக்கட் டெஸ்டின் 2-வது நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா 5 விக்கட் நஷ்டத்திற்கு 351 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சினில் கவாஸ்கர் கப்டனாகத் தெரிவுசெய்யப்பட்டபின் தமது முதல் டெஸ்டில் 205 ஓட்டங்களைப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இங்—257-8

பிரிஸ்பேன், டிச 2

ஆஸ்திரேலியா இங்கிலாந்து 1-வது ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து 8 விக்கட் நஷ்டத்திற்கு 257 ஓட்டங்களைப்பெற்றது. (இ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ

# நெல்லியடிப் பகுதி இளைஞர்கள் பயணம்

(நெல்லியடி)

மட்டக்களப்பு, கல்முனை போன்ற பகுதிகளில் சூறுவளியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்முகமாக நெல்லியடிப் பகுதி இளைஞர் கோஷ்டி ஒன்று சனிக்கிழமை அதிகாலையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு புறப்பட்டுச்சென்றுள்ளன.

தனியாருக்குச் சொந்தமான லொறிவண்டிமூலம் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்லும் இவ்இளைஞர் கோஷ்டியை நெல்லியடி சனசமூக நிலையத்தினர் தெரிவுசெய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அரிசி, கோதுமைமா, பாய்கள், விளக்குகள் கிடுகுகள், ஆடைகள் என்பனவற்றையும் இளைஞர் கோஷ்டி பெருமளவில் எடுத்துச்செல்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் இக்கோஷ்டியினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது சரீர உதவிகளையும் வழங்குவார்கள்.

நெல்லியடிப் பகுதி வர்த்தகர்களிடமும், கரவெட்டி, நவிண்டில், நெல்லியடி, துன்னாலைதெற்கு. கரணவாய் வடக்கு ஆகிய பகுதிகளில் நெல்லியடி சனசமூகநிலையத்தினரும், என். சீ. சீ. விளையாட்டுக்கழகத்தினரும் கூட்டாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்தார்கள்.

# பரீட்சை நிலையம் பற்றி ஆசிரியர், பெற்றோர் அதிருப்தி

(நெல்லியடி)

எதிர்வரும் 12-ம் திகதி ஆரம்பித்து நடைபெறவுள்ள க. பொ. த சாதாரணப் பரீட்சைக்கு (புதியபாடத்திட்டம்) தோற்றும் கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையம் சம்பந்தமாக, மேற்படி பாடசாலை ஆசிரியர்-பெற்றோர் பரீட்சைத் திணைக்களத்துக்கு தமது அதிருப்தியினை தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி கல்லூரியில் கல்வி பயிலும் 90 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் 30 பேர் பெண்களாவர். இந்த மாணவர்களுக்கு போக்குவரத்து வசதியற்றதும், பல மைல்களுக்கு அப்பாற்பட்டதுமான பரீட்சைநிலையம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாணவர்களுக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி பரீட்சை நிலையமே ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர் இந்தப் பரீட்சை நிலையத்தை சென்றடையமுன் பல பரீட்சை நிலையங்களைக் கடந்துதான் செல்லவேண்டும்.

இப்பரீட்சை நிலைய ஒதுக்கல் பற்றி பெற்றோர் கவலைதெரிவித்ததுடன், மிக விரைவில் கல்வியமைச்சு அதிகாரியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்கள்.

## சூறுவளிநிதிக்கு தர்மப்பணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பல வழக்குகளில் தர்மபணம் கட்டச்சொல்லி தீர்ப்பளிக்கப்பட்டதைத்தொடர்ந்து அந்த தர்மப்பணத்தை சூறுவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்புமாறு எதிரிகள் கோரியதை நீதவான் ஏற்றுக்கொண்டார்.

பருத்தித்துறை நீதவான் கே ஞானச்சந்திரன் எதிரிகளின் கோரிக்கைப்படி வழக்குகளில் கட்டப்படவேண்டிய தர்மப்பணம் சூறுவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பப்படுமென்று தெரிவித்தார்

இந்ததர்மப்பணம் யாழ். ரோட்டரி சங்கதலைவருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினார். (க)

## கிளிநொச்சி பரந்தனில் நிதிசேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை தமிழ்நாடக் கலைஞர் பேரவையினர் கிளிநொச்சி, பரந்தன், சாவகச்சேரியில் இன்று புயல்நிவாரண நிதிசேகரிப்பில் ஈடுபடுவர்.

## "புதுமலர்"

நெடுங்கேணி குளவிசுட்டான் கனிஷ்ட உயர்தர வித்தியாலயவெளியீடான "புதுமலர் மாணவர் கவிதைத் தொகுதி வரப்பெற்றோம்.

கலைமகளைத் துதித்துப் பாடப்பெற்ற மணிமணியான சில கவிதைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

மேற்படி கல்லூரில் பயிலும் மாணவ-மாணவிகளால் பாடப்பெற்ற இப்பாடல்கள் நூல் உருவில் வெளிவர உதவியவர்களுக்கும், ஆக்கமும், ஊக்கமும் அளித்துள்ள அதிபர், ஆசிரியர்கள், வட்டாரக் கல்வி அதிகாரி போன்றோர் பாராட்டுக்குரியவர்கள்.

## பிரயாணிகள் அதிருப்தி

(உடுப்பிட்டி)

நெல்லியடியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பஸ் பிரயாணிகள் தங்குமண்டபம் பஸ் பிரயாணிகளின் அதிருப்திக்கு இலக்காகியுள்ளது இப் புதிய பஸ்பிரயாணிகள் தங்குமண்டபம் பஸ்பிரயாணிகளின் பலவருடக் கோரிக்கையைத் தொடர்ந்து 10,000 ரூபா செலவில் நிறுவப்பட்டு வருகின்றது.

கடும் மழை, வெயில்காலங்களில் இத் தங்குமண்டபத்தில் பிரயாணிகள் பாதுகாப்பாக தங்கமுடியாதமுறையில் இம் மண்டபம் அமைக்கப்பட்டு வருவதாலேயே பிரயாணிகள் அதிருப்தி தெரிவிக்கின்றார்கள். (உ)

## நீதிமன்ற விற்பனை

கொழும்பு மாவட்ட நீதிமன்றம்.

வழக்கு இலக்கம்: சி/647/ எஸ்.

கொழும்பு மேர்க்கன்ரைல் கிறடிற் லிமிட்டெட்.

வழக்காளி.

(1) முத்துக்குமாரு ராமலிங்கம், இலக்கம்: 49, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

(2) ராமநாதன் தியாசலிங்கம், வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்.

இதன் கீழ்க்காணப்படும் 1ம் எதிராளியாகிய முத்துக்குமாரு ராமலிங்கத்தின் ஆதனத்தை 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ந் திகதி முற்பகல் 10-30 மணிக்கு அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

யாழ்ப்பாணம் வைத்தியசாலை ரோட் 49ம் இலக்கத்தில் வசிக்கும் முதலாம் எதிரி முத்துக்குமாரு ராமலிங்கம் மேலே கூறப்பட்ட வழக்கில் வழக்காளியாகிய கொழும்பு மேர்க்கன்ரைல் கிரடிட் வரையுள்ளது என்ற ஸ்தாபனத்துக்கு ரூபா 4 24/62ம் 20-11-1974ம் திகதியிலிருந்து முழுப் பணமும் கட்டும் வரை 15% வட்டியும் வழக்குச் செலவும் 1975ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ந் திகதி அன்று தீர்ந்த தீர்வையின் பிரகாரம் கொடுக்க வேண்டும்.

### ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் பச்சிலைப்பள்ளிப் பகுதி பளை இறையில் உள்ள "காரைக்காடு" என அழைக்கப்படும் தென்னந்தோட்டமும், நெற்காணியும் ஏக்கர் ஐம்பது 50) இதன் எல்லைகள் கிழக்கு குளம், வடக்கு ரோமன் கத்தோலிக்க மிசனுக்குரிய ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு வாய்க்கால்.

கா. கணபதிப்பிள்ளை.
பிஸ்கால்
யாழ் வலயம்,
மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

0961

# வரி விளம்பரம்

### தேவை

கொழும்பில் தலைமை அலுவலகம் அமைந்துள்ள பிரபலமான பொறியியல் கலை ஆலோசனை வழங்கும் ஸ்தாபனம், ஒரு கிளை அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு, 600 ச அடி- 700 ச.அடி பரப்புள்ள கட்டிடம் நீர், மலசலகூட வசதிகளுடன், 1979ம் ஆண்டு தைமாதம், 1ம் திகதி முதல் தேவைப்படுகின்றது, மேற்கூறிய வசதிகளுடன் ஸ்ரான்லிவீதி, ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டுவீதி, பிரதானவீதி இல் கட்டிடங்களையுடைய சொந்தக்காரர்கள் 1978ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10ம் திகதிக்கு முதல வாடகை உட்பட சகல விபரங்களுடனும் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 0950, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0950

"ஒழுக்கமும் பண்பும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவரும் வீட்டிலேயே தங்கி வீட்டு வேலைகளிலும் உதவி செய்யக்கூடியவருமான காரி சாரதி உடனே தேவை. மெக்கானிக் அனுபவம் உள்ளவராக இருந்தால் விரும்பத்தக்கது. -நற்சான்றிதழ்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்தை குறித்து விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0939 C/o, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம் 0939

குளிர்சாதனப்பெட்டி திருத்துவதற்கான திருத்துனர் பதவியொன்றுக்கு எழுத்துமூலமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி, மின்மோட்டர், மின்விசிறி, மின்இணைப்பு போன்ற மின்வேலைகளில் போதிய அறிவு பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பங்கள், இரண்டு நற்சாட்சிப் பத்திரம், தொழில் பயிற்சியை நிரூபிப்பதற்கான சான்றிதழ்களை இணைத்து, 8-12 78க்கு முன்னர், "மனேஜர்" வாக்கர் சன்ஸ் அன் கோ லிமிட், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். 0923

யாழ்ப்பாணம் பஜாரில் பிரபல வர்த்தக ஸ்தாபனத்துக்கு பலசரக்கு வியாபாரத்தில் நல்லஅனுபவமுள்ளவர் தேவை நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 0907, மே/பா, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 0907

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்

## கட்டிடஏலவிற்பனை

எமது சங்கத்தின் கோண்டாவில் கிழக்கு விவசாய களஞ்சியக் [கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள] கட்டிடம் [கூரை கதவுகள் நீங்கலாக] ஏலத்தில் விற்கப்பட உள்ளது. இக்கட்டிடம் எதிர்வரும் 10- 12-78ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இக்கட்டிடத்தை கொள்வனவு செய்ய விரும்புவோர் முன்கூட்டியே மீள அளிக்கப்படாத பிணைப்பணம் ரூபா 10/- செலுத்த வேண்டும். ஏனைய விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும.

**பொதுமுகாமையாளர்**

நல்லூர் ப. நோ கூ. சங்கம்
திருநெல்வேலி.

2. 12.78

0963

### தேவை

வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்குத் தேவை. ஆனைக்கோட்டை, மானிப்பாய், மருதனமடம் ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க. போதகர் வி. ஜே. ஜெயரெட்ணம், நிறைவான புதுவாழ்வு நிலையம், தேவாலய ஒழுங்கை, கூளாவடி, ஆனைக்கோட்டை, 0936

வவனியா நகர எல்லைக்குள் மன்னார் வீதியில் தண்ணீர், மின்சார வசதியுடன் மில் போடுவதற்கும், வீடு கட்டுவதற்கும் ஏற்ற இரண்டு ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: 69/1, பஸார் வீதி, வவனியா. டெலிபோன்: 348. 0945

விலங்கு உயிரியல் ஆசிரியோன் 'கிரேப் அன் றுவல்' 15, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்பபாணம். 0925

### விற்பனைக்கு

புடவைக்கடைக்கும், சில்லறைக் கடைக்கும் தகுந்த அதிகம் பாவிக்கப்படாத கண்ணாடி அலுமாரி மூன்று விற்பனைக்கு உள்ளது. ஜெயலெட்சுமி கம்பெனி 244, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம், டெலிபோன் 7894. 0955

இரண்டு தட்டு கோழிக் கூடும், நாய்க்கூடும் விற்பனைக்குண்டு. தர்மலிங்கம். போஸ்ட்மாஸ்டர், பொற்பதி வீதி, கோண்டாவில். 0942

22 ஸ்ரீ 5247 இலக்க மெர்ஸி பேர்குஸன் 35 டிராக்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி மாதவகுமார், றெயில் ரோட், கொக்குவில். 0935

ஹம்பர் ஹோக் EL தொடர் இலக்கக் கார் விற்பனைக்குண்டு 43, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். 0959

சிறந்த இனமுள்ள முழு வளர்ச்சி பெற்ற, நன்குகப் பழக்கப்பட்ட நாய் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். 223 நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 0960

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பாடசாலைக்கு அருகாமையில் 285, அரசடி வீதியில் இருக்கும் வீட்டின்முன் கல்அட்டியல் ஒன்று கைதவறிவிழுந்துவிட்டது. எடுத்தவர் மேற்காட்டிய விலாசத்தில் ஒப்படைத்தால் நியாயமான சன்மானம் வழங்கப்படும். கு. வை. முத்தையா (கணக்காளர்). 0954

### பயிற்சி

6 மாத டிப்பிளோமா மோட்டார் மெக்கானிக் பயிற்சி 05-01-1979ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு; அதிபர். இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0915

## நிறுவுநர்நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவுநாளும், பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5-00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் கொண்டாடப்படும். நாளை திங்கட்கிழமை காலை 2-00 மணிக்கு சமாதி ஆலயத்தில் அபிஷேகமும் திருவிழாவும் நடைபெறும். (இ)

## ஆலய முன்மண்டப வரைபடம் தேவை

யாழ்-வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் இராஜகோபுர முன்மண்டபம் அமைப்பதற்கு வைணவ ஆலய முறைமைக்கு ஏற்றவகையிலான வரைபடம் ஒன்று தேவைப்படுகின்றது இதனைத் தேவஸ்தான முகவரிக்கு கட்டடகலைஞர்கள் 31-12-78-க்கு முன்னதாக அனுப்பிவைக்கவும். தேர்ந்தெடுக்கப்படும் வரைபடத்திற்கு வேதனம் அளிக்கப்படும் மற்றைய விபரங்களுக்கு தேவஸ்தான முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும். 0913

## பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வெற்றிடங்கள்

1. யந்திரமூலம் கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தியில் அனுபவமுள்ளோர்
2. ஊதுபவர்கள் (Blowers)
3. உதவியாளர் (Gatherers)
4. குமிழர் (Bubblers)
5. மழுப்புபவர் (Fusers)
6. சூளைப்பகுதி உதவியாளர்
7. வேலை பழகுவோர் (நாள் சம்பளம் ரூபா 5/-)

8-12-78 காலை 10-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை விண்ணப்பப்பத்திரத்துடனும், நற்சாட்சிப் பத்திரத்துடனும் நேரில் வரவும். 0922

# அவள் ஒரு புதிர்!

**கே. என். நடராஜன்**

நிர்மலா!

அவள் அந்தக் காரியாலயத்திலே ஓர் புரியாத புதிர்! அவள் யார் எங்கிருக்கிறாள்? கைநிறையச்சம்பளம் வாங்கும் அவள் ஏன் இப்படிக் கஞ்சத்தனமாக வாழ்கிறாள்? யாருக்காக அவள் காலைமுதல் மாலைவரை போதாதமைக்கு ஓவர்டைம் வேறு செய்து உழைக்கிறாள்? அவள் குடும்பம் எப்படிப்பட்டது? வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

அழகும் இளமையும் அவளுக்கே உரித்தான ஒரு சொத்தாக இருக்கும்போது... அவளுக்கும் ஏதாவது போய்பிரண்ட்... அது இது என்று இருக்கக்கூடுமா? அல்லது காதலிலே தோல்விகண்ட ஒரு விரக்தி வாழ்க்கையா?

அந்தக் காரியாலயத்தில் அவளோடு தொழில்புரியும் அனைவருக்கும் இது ஒரு புரியாத புதிர்.

ஆரம்பத்தில் அவளோடு கதைகொடுத்து சூடான பதில் பெற்று அன்றிலிருந்து தனது வாய்க்கு ஒரு பூட்டுப்போட்டுக்கொண்டான் அப்பாவி கோபு.

அதையடுத்து ஒருநாள் அவளது நிலையை அறிய முற்பட்டு அழாக்குறையாக திரும்பி வந்தான் ராமு.

அதுமட்டுமல்ல! பாவம் ரிட்டையர் ஆகிற வயதில் உள்ள ஹெட் கிளாக் பரமசிவம் - ஒருமுறை கதைகொடுத்து அசடுவழிய வந்ததும் ஒரு பரிதாபக்கதைதான்.

"என்னம்மா நிர்மலா! நானும் தினமும் பார்த்துக்கொண்டேதான் வர்ரேன். நீ யாரோடு கூடவும் மனம்விட்டுப் பேசியதாய் இல்லை ஏன்? நாங்களெல்லாம் மனிதர்களில்லையா? அல்லது" இப்படி ஒரு பீடிகையோடு நிர்மலாவிடம் பேச்சைத் தொடங்கினார் பரமசிவம்.

"அப்படியொன்று மில்லை மிஸ்டர் பரமசிவம்! என் சுபாவமே அப்படித்தான்! நான் யாரோடு கூடவும் அளவுக்கு அதிகமாகப் பேசவிரும்புவதில்லை. இதைக்கொண்டு நீங்கள் என்னைத் தப்பாகப் புரிந்துவிடாதீர்கள்! நானும் உங்கள் எவரையும் குறைவாக நினைக்கவில்லை. நான் உண்டு என் வேலை உண்டு. அதுதான் என் பொலிஸி" என்று கூறிவிட்டு தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள் நிர்மலா.

பரமசிவத்திற்கு எல்லையில்லாத சந்தோஷம்! முதன்முதலாக நிர்மலாவுடன் பேசிய பெருமையோடு ராமுவும் கோபுவும் இருந்தபக்கம் பார்த்துத் தன் பெருமையை ஒரு சிரிப்பால் மோதவிட்டார். கதையைத் தொடரும்படி இருவரும் கண்ஜாடை காட்ட பரமசிவத்திற்கும் ஒரு புத்துணர்வு ஏற்பட்டுவிடுகிறது!

சுற்றி வளைத்து கதைகளைப் போட்டு மேலடியாக அவள் குடும்ப விபரங்களை ஒருவாறு அறிந்துகொண்ட அவர் அத்தோடு விட்டிருந்தால் பரவாயில்லை! தொடர்ந்தும் கதைகளைப் போடத்தொடங்கினார்!

"அம்மா நிர்மலா! நான் கேட்கிறேன் எண்டு தவறு நினைக்கக்கூடாது! பருவத்திலே பயிர் செய் எண்டு பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ காலாகாலத்தில கலியாணத்தைச் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாய் இருக்கிறதைவிட்டிட்டு..." பேச்சை விழுங்கினார் பரமசிவம்.

டைப்செய்ததை அப்படியே விட்டுவிட்டு பரமசிவத்தை விழுங்கிவிடுவது போலப் பார்த்த நிர்மலாவின் பார்வையில் பரமசிவத்திற்கு தலை சுற்றுவதுபோல இருந்தது.

"மிஸ்டர் பரமசிவம்! உங்களுக்கும் என் வயதைவிட ஐந்து வயது மூத்த ஒரு மகள் இன்னும் திருமணமே ஆகாமல் இருப்பதாக அறிந்தேன். முதலில் அந்தப் பெண்ணுக்கு ஒரு ஆளைத் தேடித் திருமணத்தைச் செய்துவைத்துவிட்டு என்னைப்பற்றி அனுதாபப்படுங்கள்."

நிர்மலாவின் இந்த எதிர்பாராத பதில் பரமசிவத்தின் பழுத்த முகத்தில் அரும்பியிருந்த குறும்பு மறைந்து அசடு பெருக்கெடுத்தோட தன் ஆசனத்தில் வந்து அமர்ந்துகொண்டு தூசுபடிந்த பைல் கட்டுகளைப் புரட்டத்தொடங்கினார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் பரமசிவம் யாருடனும் தலைநிமிர்ந்து பேசுவதில்லை. கோபுவையும் ராமுவையும்தான் மனதிற்குள் திட்டிக்கொண்டு மௌனமாகவே காரியாலயத்திற்கு வந்துபோய்க்கொண்டிருந்தார்.

"எப்படியிருந்தாலும் இவளுக்கு இப்படி ஒரு கர்வம் இருக்கக்கூடாது" என்று கூறிய கோபுவின் அபிப்பிராயத்திற்கு ராமுவும் தனது ஆதரவைக் கூறுவதுபோலத் தலையசைத்துக்கொண்டான்.

நிர்மலாவை எப்படியும் மட்டம்தட்டி அடக்கிவிட வேண்டும் என முயற்சிசெய்த கோபுவும்-ராமுவும் எதிலுமே தோல்வியே கண்டனர். மனேஜருக்குப் 'பந்தம்' பிடிப்பது முதல் அவளது பிரத்தியேக நடவடிக்கைகளிலும் கண்காணிப்புச் செய்து பார்த்தனர். யாவும் பூஜ்யமாகிவிடுவதற்கு-அவளின் பண்பான-நடத்தையும் கடமையிலே அவள் காட்டும் அக்கறையுமே காரணமாகவிருந்தது.

இவையாவும் நடந்து ஒரு வாரம் கடந்துவிட்டது. அன்று காலை மனேஜர் யாவரையும் தனது அறைக்கு அழைத்து தனது மகளின் முதலாவது பிறந்ததின வைபவத்தை அன்று மாலை வீட்டில் கொண்டாடவிருப்பதாகவும் அனைவரையும் அந்த வைபவத்திற்கு வரும்படியும் அழைப்பு விடுத்தார்.



மனேஜரின் வீட்டில் அன்று மாலை விருந்து வைபவம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அவரின் மனைவி பதறியடித்துக்கொண்டு ஓடிவந்து அவரின் காதுக்குள் ஏதோ கூறிவிட்டு நிற்பதைப் பார்த்ததும் கூட்டத்திலே ஒரு சிறு சலசலப்பு ஏற்படுகிறது.

கோபு! என்று அழைத்த மனேஜர் தனிமையில் அவனை அழைத்துச் சென்று நடந்ததைக் கூறிவிட-கோபுவும் அருகில் வந்து நின்ற ராமுவும் திகைத்தபடி நிற்கின்றனர். 'சார்! நான் சொல்லுகிறேன் என்று கோபிக்கக்கூடாது! நிர்மலாதான் உங்கள் பேபியை தூக்கி வைத்துக் கொண்டிருந்ததை நான் பல தடவைகள் பார்த்தேன். அதுமட்டுமல்ல, அங்குமிங்கும் பார்த்தபடி ஏதோ தன் டிபன் கரியரை திறந்து மூடிக்கொண்டதையும் கூட ஒரு தடவை நான் அவதானித்தேன் சார்!

'சார்! நான் கூட அதைப் பார்த்தேன் சார்! நிச்சயமாய்ச் சொல்லுறன் காணாமல் போன அந்தச் செயின் கண்டிப்பா நிர்மலாவின் டிபன் கரியலில்தான் இருக்கிறது. வேணுமெண்டால் ஒருமுறை நீங்களே பரிசோதனை செய்து பாருங்களேன.'

'சீ! எமது காரியாலயத்திற்கே இது ஒரு அவமானமாகவிருக்கிறது! நீங்கள் சொல்கிறது ஒருவேளை சரியாகவும் இருக்கலாம்.' ஆத்திரத்தோடு கறுவிக்கொண்டு பார்ட்டி நடந்த இடத்திற்குப் போகிறார் மனேஜர்.

ராமுவும் கோபுவும் நிர்மலா இருந்த இடத்திற்கு எதிராக [illegible] நின்று நிர்மலாவின் டிபன் கரியரைப் பார்த்தபடி இருக்கின்றனர்.

"ராமு! மனேஜரின் குழந்தையின் கழுத்தில் இருந்த செயின் காணாமல் போய்விட்டதாம். அவா ஆபீஸில் உள்ளவர்கள் மீதுதான சந்தேகப்படுகிறார், விருந்து முடிய எல்லோரையும் செக் பண்ணுகிறது மட்டுமல்லாமல் - அவர்கள் கொண்டுவந்த பொருட்கள் யாவையும் கூடச்சோதனை போடப் போறதாகக் கூறிவிட்டுப் போறாருடா" என்று நிர்மலாவுக்குக் கேட்கும் படியாக, அவள் டிபன் கரியரைப் பார்த்தபடி கூறினான் கோபு

இதைக் கேட்டதும் நிர்மலாவின் முகத்தில் ஒரு பீதி குடிகொண்டு அவள் முகத்தில் வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்தோட - திருதிருவென விழித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் ராமுவும் கோபுவும் தம்மை இரு துப்பறியும் புலிகளாக எண்ணிப் பெருமையுடன் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டனர்.

சிறிது நேரத்தின் பின்பு ஏதோ அலுவலாக அப்பால் சென்றுவிட்டு வந்த கோபுவுக்கும் ராமுவுக்கும் ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

டேய்! பட்சி பறந்திட்டுதடா! நிர்மலா எங்கேடா? கட்டிடச்சை ஓர் அலச அலசிப் பார்த்தும் நிர்மலாவைக் காணவில்லை.

ராமுவின் மூளை தீவிரமாக வேலைசெய்யத் தொடங்கியது. அவளைத்தேடி வாசலுக்கு வந்தவன் - தெருவில் நிர்மலா அசுரவேகத்தில் பறந்து கொண்டிருப்பது தெருவிளக்கின் ஒளியில் தெரிகிறது.

அதற்குமேல் ராமுவால் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. நிர்மலாவைத் தொடர்ந்தான். அவள் திரும்பிப்பார்க்கும்போதெல்லாம் இருளில் மறைந்தபடி சென்று கொண்டிருந்த அவன், திடீரென அவள் ஒரு சிறு குடிசைக்குள் நுழைவதைக் கண்டதும் தன் நடையை நிறுத்தி அந்தக் குடிசையின் பக்கமாக உள்ள ஓலைத் தட்டிக்கு அருகாமையில் நின்றபடி அங்கு நடப்பதை அவதானிக்கும் ஆவலில் உள்ளே எட்டிப் பார்த்தபடி மறைந்து நின்றான்.

வீட்டின் நடுவில் ஒரு குப்பி விளக்கு எரிந்துகொண்டிருந்தது அதன் அருகே ஒரு வயோதிப மாதும் ஒரு சிறுவனும் அமர்ந்திருக்கின்றனர்.

அக்கா வந்திட்டியா? என்றபடி நிலத்தில் அரக்கி அரக்கி அவள் அருகில செல்லுகிறான் அந்தச் சிறுவன். நன்றாக உற்றுப்பார்த்தான் ராமு! பாவம் முடமான சிறுவன் நிர்மலாவின் தம்பியாகவிருக்கும் என்று தீர்மானித்த அவன்-அருகில் இருக்கும் வயோதிப மாது நிர்மலாவின் தாயாகவும் இருக்கும் என ஊகித்துக் கொள்கிறான்.

அருகில் வந்த நிர்மலா, டிபன் கரியரைத் திறக்கும்போது ராமு கண்ணைக் கசக்கிவிட்டுக் கூர்மையாகப் பார்வையைச் செலுத்தினான் அதன்மீது.

அங்கே அவன் எதிர்பார்த்த செயின் காணப்படவில்லை. அதற்குமாறாக விருந்தின் போது வழங்கப்பட்ட இனிப்புப் பட்சணங்கள் காணப்பட்டன. இதைக் கண்டதும் ஏதோ அவலமனம் வேதனைப் பட்டது.

அம்மா! விருந்தின்போது இவைகளை எல்லோருக்கும் பரிமாறினார்கள். ஆனால் எனக்குத் தம்பியை விட்டுவிட்டு தனிய நான் மட்டும் சாப்பிட மனதுவரவில்லை. யாருக்கும் தெரியாமல் அங்கு பரிமாறப்பட்ட சில பட்சணங்களை டிபன் கரியரில் போட்டு வைச்சன். அதே நேரம் பார்த்து மனேஜரின் குழந்தையின செயின் காணாமல் போயிட்டுது. எல்லாரையும் பரிசோதனை செய்யப்போறதாக அறிஞ்சவுடனே இதையெல்லாம் யாரும் பாத்திட்டா எவ்வளவு அவமானம் எண்டு நினைச்சு, எவருக்குமே தெரியாமல் ஓடி வந்திட்டன் என்று கூறியபடி அந்தச் சிறுவனுக்கு அவற்றை ஊட்டினாள் அவள்.

இதைக் கேட்டுக் கொண்டு நின்ற ராமு கண்கள் கலங்கியபடி செயலற்றஅவ்விடத்தை விட்டு வெளியேறி மனேஜரின் வீட்டை வந்தடைகிறான்.

'டேய் ராமு! செயின் இருக்குதடா! யாரும் எடுக்கேல்லை! குழந்தை விளையாடும் போது கழன்று விழுந்து அதன் உள் சட்டைக்குள்ளேயே செயின் பவித்திரமாக இருந்தது. மனேஜர் மிகவும் கவலைப்பட்டுக் கூறினாரடா"

கோபுவின் இத்தகவல் ராமுவின் வேதனையை மேலும் அதிகரிக்கச் செய்துவிட ஒரு மூலையில் சென்று அமர்ந்துகொள்கிறான். அவன் மனம் நிர்மலாவிடம் மௌனமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறது.

(யாவும் கற்பனை)

---

**எழுதியவர்**

26-11-78 ஈழநாடு வாரமலரில் இடம்பெற்ற 'அண்ணன் ஒரு கோயில்' சிறு கதையை எழுதியவர் செல்வி சகுந்தலா தம்புசாமியாவார்.

---

**உருவகம்**

# உபதேசம்!

**மணிமணாளன்**

"அம்மா! மனிதன்தான் நமது முதல் எதிரி என்று அடிக்கடி சொல்லி எச்சரிப்பாயே... இன்று காலை என்ன நடந்தது. தெரியுமோ—?" என்று கேள்விக்குறியோடு நிறுத்தியது ஒருகுட்டிப்பாம்பு.

தாயானவள் மகனை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

என்ன நடந்தது என்று அறியும் வேட்கை அவன் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

அதனைத் தானும் புரிந்துகொண்டாற்போல் குட்டிகூறியது—

"ஏழெட்டு வயசுடைய ஒரு பொடிப் பயல் எங்கள் வீட்டின் முன்நின்று, 'நல்ல பாம்பே! நல்ல பாம்பே! என் கெட்ட பல்லை எடுத்துக்கொண்டு ஒரு நல்ல பல் தா' என்று கெஞ்சினான் தெரியுமா?"

...இப்படிக் கூறிவிட்டு வாய்விட்டுச்சிரித்தது குட்டிப்பாம்பு

"இதற்கேன் மகனே சிரிக்கிறாய்... நீ குழந்தைப் பிள்ளைதானே உனக்கொன்றும் தெரியாது அந்தப் பொடியன்கூட உன்னைப்போல் ஒரு அப்பாவிதான் ஆனால் அவன் பெற்றோர் சொல்லிக் கொடுத்த பாடமடா அது." என்று கூறிப் பெருமூச்சு விட்டது தாயரவம்.

"ஏனம்மா ஒரு மாதிரி விரக்தியுடன் பேசுகிறாய்?" என்று தாயைப் பரிவோடு நோக்கியது சேய்!

மீண்டும் ஒரு நீண்ட பெருமூச்சுடன் தாயவள் தொடர்ந்தாள்—

"மனிதனைப்பற்றி நிறையச் சொல்லட்டுமடா கண்ணு. அவனைப்பற்றிய பூர்வாங்கமும் அறியுமுன் உன்ஆயுள் தீர்ந்துவிடும். அப்படிப்பட்ட கதை அது. போகட்டும், இப்பொழுது அந்தப் பையன் கேட்டதற்கு மட்டும் விளக்கம் சொல்லுகின்றேன்; கேள்..."

"...ம்...ம்...நீட்டி வளர்க்காமல் கெதியாய்ச் சொல்"

—குட்டி, தனக்கேயுரிய அவசரத்துடன் படபடத்தது.

"எங்களைவிட மனிதனுக்குத்தான் அறிவு அதிகம். அவனே தன்னைப்பற்றிக் கூறு போது, எங்களெல்லோரையும் விடத் தானுயர்ந்தவன் என்றே கூறிக்கொள்கிறான். 'மனிதனுக்கு அங்கமெல்லாம் விஷம்" என்று எவனோ ஒருவன் தன்னைப்பற்றியே பாடியிருக்கிறான். அவன் பல்லைவிட எங்கள் பல்லில் விஷம் அதிகமாம். அதனால் இந்தப் பல்லையும் தான் பெற்றுவிட்டால் எங்களை அடிமைகொள்ளலாம் என்பது அவன் எண்ணம். பாவம், முட்டாள்... இவ்வளவு பெரிய அறிவாளிக்கு ஒரு விஷயம் புரியவில்லையே... நமது விஷப்பையோடு சேர்த்தல்லவா பல்லைக் கேட்டிருக்க வேண்டும். நல்லவேளை அவன் 'நல்ல பாம்பே...நல்ல பாம்பே..." என்று 'ஐஸ்' வைத்துக் கூப்பிடவும் நீ போகாமல் தப்பினாய். நான் பாக்கியம் செய்தவள் தான். நீமட்டும் அவன் பேச்சைக் கேட்டுப் பல்லைக் கொடுக்கப் போயிருந்தால், அந்தச் சின்னப் பொடியன்கூட உன்னைக் கொல்லத்தான் முயன்றிருப்பான்" என்று நீட்டி முழக்கி நிறுத்தியது தாயரவம்.

"அம்மாடீ... இப்படிப்பட்ட மனிசனோடு உறவு வைக்கக் கூடாதம்மா... அவன் பல்லைக் கொண்டுபோய் எங்கள் வீட்டுக் கோடியில் போட்டிட்டு வரட்டுமா?" என்றது குட்டிச் சர்ப்பம்.

தாய் மகனைப் பார்த்துப் பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டே உச்சிமோந்தது

# யாழ். கடல் ஏரியில் காணப்பட்ட நீர்த்தம்பம்!

## யாழ். வளாக புவியியல் பகுதியினர் தரும் விளக்கம்

**சிலதினங்களுக்குமுன் யாழ்ப்பாணம் பண்ணைக் கடலில் மேகத்திலிருந்து யானையின் துதிக்கை இறங்கியதுபோன்ற ஒரு தோற்றத்தைக் கண்டு பலர் அதிசயித்தார்கள் அல்லவா? இந்த அது பற்றிய விளக்கத்தை தருகிறார்கள் யாழ்.வளாகப்புவியியல்துறையினர்.**

கடந்த 15-11-78 புதன்கிழமை ஏறக்குறைய மதிய வேளையில் (1-00 பி. ப. — 1-30 பி.ப.) யாழ். நகரத்துக்குத்தெற்காக மண்டைதீவை அண்மித்து நீர்த்தம்பம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்நிகழ்வு யாழ்ப்



பாண நகரத்திலுள்ள கல்லூரி மாணவர்களுக்கு ஒரு புதிராகக் காணப்பட்ட அதேவேளை அரசாங்க, தனியார்துறை அலுவலகங்களில் உள்ளவர்களுக்கு ஒரு சிறு பொழுதுபோக்காகவும் அமைந்தது எனலாம். ஆனல் உண்மையில் இந்த நிகழ்வுபற்றிய பொது மக்கள் அலட்டிக்கொள்வதைவிட இவைபோன்ற நிகழ்ச்சிகளை அவதானித்து விபரிக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் அக்கறைகொண்டனவா என்பது தெரியவில்லை.

இந்தவகையான புயல்களும் அவற்றோடு தொடர்பான நீர்த்தம்பங்களும் எப்படி ஏற்படுகின்றன என்பதுபற்றி படித்தவர்களும் அதிகம் சிந்திப்பதில்லை. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, சோவியத் ஒன்றியம் போன்ற விருத்தியடைந்த நாடுகளில் இப்படியான வளிமண்டல நிகழ்வுகள், வளிமண்டலக் கால நிலையியல் அறிஞர்களால் காலத்துக்குக் காலம் ஆராயப்பட்டு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் உலக வளிமண்டலவியல் நிறுவனம் இத்துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது வானிலை அவதானத்துக்கென மேற்குறிப்பிட்ட நாடுகளால் பெரும் சமுத்திரங்களில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் வானிலை அவதான கப்பல்களும் வானவெளியில் அனுப்பப்பட்டிருக்கும் செயற்கைக் கோள்களும் இப்படியான நிகழ்வுகளை அவதானிப்பதோடு வானிலை நிழற்படங்களையும் எடுத்துவருகின்றன. இதனல் இத்துறை சார்ந்த அறிவு மேம்பட வழி ஏற்படுகின்றது. ஆனல் எம்மிடையே இத்தகைய ஆய்வுணர்வு தனிப்பட்ட முறையிலும் அரசாங்க மட்டத்திலும் பாராட்டக்கூடிய அளவுக்கு இல்லையென்றாலும், உண்மையை அறியவேண்டிய ஆர்வம் என்ற நிலையிலும் கூட இல்லை. மேலும் இப்படியான ஆய்வை மேற்கொள்ளத் தேவைப்படும் உபகரணங்கள் (தூரதிருஷ்டிக் கண்ணாடி பொருத்தப்பட்ட கமரா, வானிலை அவதானப்படகு போன்றன) எமது கரையோர வானிலை அவதான நிலையங்களில் இல்லை என்பதையும் ஏறுக்கொள்ளவேண்டும்.

### நீர்த்தம்பம் என்றால் என்ன?

நீர்த்தம் என்றல் என்ன? எப்படி ஏற்படுகின்றது? என்பனபற்றி நமது பாமர மக்களுடன் கலந்துரையாடினேன்சுருக்கமாக, "காராளை தண்ணி குடிக்கிறது" என்று கூறுவார்கள். அண்மையில் ஏற்பட்ட இந்நிகழ்ச்சிபற்றித் தினசரிப் பத்திரிகையொன்றில் குறிப்பிடும்போது 'சூரியன் தண்ணீர் குடித்தது' என எழுதியிருந்தார்கள். ஆனல் உண்மையில் இந்நிகழ்ச்சி எப்படி ஏற்படுகின்றது?

அயனப் பிரதேசங்களில் சிறப்பாக தீர்ப்பகுதிகளில், அயனப்புயல்கள் பெரும் பிரச்னைகளை உருவாக்குகின்றன. இப்புயல்கள் சாதாரணமாக அமுக்க இறக்க நிலையில் (அதாவது மத்தியில் குறைந்த அமுக்கம்கொண்ட நிலையில்) ஆரம்பமாகி பெரும் சூழுவளிகளாக மாற்றம் அடைகின்றன. அமுக்க இறக்க நிலையின் ஆரம்பக்கட்டத்தில் தோன்றுவன எல்லாம் சூறவளிகள் ஆவது இல்லை. சில சிறுபுயல்களாகத் தோன்றி மறைகின்றன இது வளிமண்டலத்தில் கிடைக்கும் சக்தியைப் பொறுத்து நிகழ்கின்றது எனலாம். இவ்வாறு ஆரம்பநிலையில் தோன்றும் புயல்களாக 'ரொனடோ' நீர்த்தம்ப நிகழ்ச்சுகளைக் கூறலாம்.

'ரொனடோ' என்னும் பதம் இடி மின்னற் புயலுக்கு வழங்கப்படும் ஸ்பானியச்சொல்லின் ஆங்கில உருவமாகும். பொதுவாக இப்புயல்கள் அயனப் பகுதிகளில்-சிறப்பாக ஐக்கிய அமெரிக்காவின் ரொக்கி மலைகளுக்குக் கிழக்காக உள்ள பிரதேசங்கள், மேற்கு ஐரோப்பிய பகுதிகள், மத்தியதரைக் கடற்பகுதிகள், மேற்கு ஆபிரிக்கப்பகுதிகள் ஆகியவற்றில்-அடிக்கடி அவதானிக்கப்படுகின்றன. இவ்வாறு தோன்றும் ரொனடோ புயல்களுடன் நீர்த்தம்பங்களும் ஏற்படுகின்றன. இக்கருத்தை காலநிலையியல் அறிஞர்களான லொக்லுட், குரோ போன்றவர்களும் கொண்டுள்ளனர். மேலும் பிரித்தானிய வளிமண்டல அவதான நிலையத்தினரால் வெளியிடப்பட்ட வளிமண்டலவியல் அகராதியிலும் (1972) இக்கருத்துவலியுறுத்தப்பட்டுள்ளது.

இப்புயல் உருவாக மிகக் கூடிய வளிமண்டல உறுதியற்ற நிலை, கூடிய ஈரப்பதன், வளிமண்டலத்தின் கீழ்ப்பகுதிகளில் காணப்படும் காற்றுகளில் ஏற்படும் கிடையான ஒருங்கல் ஆகியன காரணமாகின்றன. வளிமண்டல உறுதியற்ற நிலை என்னும்போது அங்கு அமுக்கவேறுபாடு நிச்சயமாகக் காணப்படும். குறிப்பிட்ட ஒரு தொகுதியான காற்றில் மத்தியில் தாழமுக்கமும் சுற்றிவர உயர் முக்கமும் கொண்ட நிலை ஏற்படும் போது அங்கு நிலவும் கிடையான அமுக்கச்சாய்வு விகிதம் காற்றின சுழற்சியை நிர்ணயிக்கின்றது. இந்த அமுக்கச் சாயவு கூடுதலாகக் காணப்பட்டால் காற்றின் சுழற்சி அதிகமாகவும், குறைவாகக் காணப்பட்டால் சுழற்சி குறைவாகவும் ஏற்படலாம். இந்நிலை பூமியின் மேற்பரப்பை அண்டிய பகுதிகட்கு மட்டும்தான் பொருந்தும். ஏனெனில் வளிமண்டல உயரம் கூட புவி திரும்புவிசை, புவி ஈர்ப்புவிசை ஆகியவற்றின் பாதிப்பும் உண்டு. எனவே காற்று சுழலும்போது தோன்றும் இயக்கப்பண்புச்சக்தி மேற்படி காற்றை அசைய வைக்கின்றது. அந்த அசைவின் திசையும் அமுக்கச் சாய்வு விகிதத்தைப் பொறுத்து அமையும். ஆகவே ரொனடோ, சுழல் காற்று அமைப்பைக்கொண்டு அசையும் தன்மைவாய்ந்தது எனக் கூறலாம்.

பொதுவாக இக்காற்றுத் தொகுதியின் விட்டம் சராசரி 100 மீற்றராக இருக்கும். செல்லும் தூரம் 100 மீற்றர் தொடக்கம் நூற்றுக்கணக்கான கில்லோ மீற்றர் வரை காணப்படும். வேகம் 200 நொட்ஸ் (Knots) வரையில் காணப்படும். இக்காற்றோடு இடி மின்னலும்சேர்ந்துஏற்படுவதுண்டு. எல்லாவற்றிலும் முக்கிய அம்சம் என்னவென்றல் இக்காற்றுத் தொகுதியின் நடுப்பகுதி செங்குத்தான காற்றோட்டத்தைக் கொண்டதாகவும் பல பொருட்களை எடுத்துச் செல்லக்கூடிய வலுவுள்ளதாயும் இருக்கும். இந்தச் செங்குத்தான காற்றோட்டத்தில் குறுக்கிடும்மரங்களோ கட்டிடங்களோ தகர்த்து எறியப்படுகின்றன.

மேற் குறிப்பிட்ட காற்றுத் தொகுதி நீர்ப்பரப்பின் மேல் செல்லுகின்றபோது, அதன் நடுப்பகுதியில்-அதாவது செங்குத்தான காற்றோட்டப் பகுதியில்-நீர்த்தம்பம் (படம்) அமைகின்றது. இக் காற்றுப்பகுதி அநேகமாக மழைகொண்டதாக இருக்கும். ஏனெனில் அது திரண்ட மழை முகிலை அதிகமாக உள்ளடக்கியிருக்கும். அதே சமயம் சுழல் காற்றுல் நீர்ப்பரப்பும் கொந்தளிப்புக்கு உள்ளாகின்றது. இவ்வாறு கொந்தளிக்கின்ற போது நீர் மேலெழும்புவது தவிர்க்கமுடியாததாகும். இந்நிலையில் திரண்ட மழை முகிலிலிருந்து மழை பெய்வதுடன், ஏறக்குறைய நீராகிவிட்ட குறிப்பிட்ட திரண்ட மழைமுகிலின் ஒரு பகுதி நீர்ப்பரப்பை நோக்கி கீழ் இறங்குகின்றது. இவ்வாறு கீழ இறங்கும் வடிவம் பெரும்பாலும் கூம்பு உருவத்தைப் பெற்றிருக்கும்.

(9-ம் பக்கம் பார்க்க)



தமிழ் மொழி எவ்வளவு இனிமையானது! தத்தித் தடக்கிப் பேசும் மழலையின் மொழியில் ஓர் இனிமை!!

—யாமறிந்த மொழிகளிலே இனிதாவது தமிழ் என்று கூறிய பாரதியாரின் வாக்கை நண்பர் ஒருவர் மூலம் அறிந்தார் கிழக்கு ஜெர்மனியில் வாழும் திருமதி மாரியா ஹெர்மன்! அப்படியென்ன இனிமை என்ற கேள்வியோடு ஆர்வம் மேலோங்க, தமிழ் மீது தீவிர கவனம் செலுத்தினார் அவர்! சொல்லிக் கொடுக்க எவருமேயில்லை. வாசிக்கக்கூட ஒரு தமிழ்ப் புத்தகமும் கிடைக்கவில்லை. ஆனாலும் அவரது மனம் தளர்ச்சியடையவில்லை; தனம் பயில்லை.

# தமிழ் நாட்டுக்கு வந்ததில்லை; தமிழ் கலாசாரத்தை நேரில் பார்த்ததில்லை; ஆனால்...

# தமிழ் படித்துத் தமிழ்ப் பெண்ணாக வாழ முயலும் ஜெர்மன் பெண்மணி

எஸ். ஜெகதீசன்

## விளம்பரம்

கிழக்கு ஜெர்மனி விதித்திருக்கும் கட்டுப்பாட்டின் படி அவரால் வெளிநாடுகளுக்குப் போக முடியவில்லை. எனினும் வெளிநாடுகளில் உள்ள பத்திரிகைகளில் தனது தணியாத ஆர்வம்பற்றி விளம்பரம் செய்தார் உதவி மனப்பான்மை தழைத்தோங்கியிருக்கும் தமிழர்கள்பலர் அவருக்கு ஊக்கம் அளித்தனர். பலகை ஏராளமான புத்தகங்கள் அவரை நாடி விரைந்தன. திருக்குறள், கிழக்கு ஜெர்மன் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதால் அதையே முதலில் படிக்க முற்பட்டார். அவருக்குக் கிடைத்த தமிழ் அரிச்சுவட்டின்மீது திரும்பத் திரும்ப எழுதினார் அவரது ஆர்வம் குன்றவில்லை. அறிவு தேயவில்லை.

## திருக்குறளின்மீது ஆர்வம்

ஆறு ஆவன்னு எழுதிய கைகள் மெய்யெழுத்துக்களுடனும் விளையாடியது கசடதபற என்றால் வல்லினம் என்பது எம்மவர்களுக்கு மறந்து போனாலும் அவருக்கு மறக்க முடியவில்லை. அரிச்சுவட்டையே ஒழுங்காகப் படிக்காத பிள்ளை திருக்குறளை அழகுப் பொருளாகவே எண்ணும். ஆனால் மரியா ஹெர்மனுக்கு அது ஒரு பொக்கிஷமாகப் பட்டது. அள்ள அள்ளக் குறையாத சுவையான பண்டமாக நினைக்க முடிந்தது.

தமிழ் மொழியில் தற்பொழுது நன்கு தனித்துவம் பெற்றவர்! விரைவிலேயே புலமைத்துவம் பெறமாட்டாரா?

இந்த அதிசயப் பெண்மணியுடன் தொடர்பு கொண்டேன்!

எடுத்த எடுப்பிலேயே அழகாக 'வணக்கம் ஐயா' என்ற பொழுது என்னால் என்னையே ஒரு கணம் நம்ப முடியவில்லை. 'குட்மோனிங்' என்று ஜேர்மன் கூறும் தமிழர்களுக்கு மாரியா உண்மையிலே ஒரு சாட்டை அடி கொடுத்தார்

## பிள்ளையார் சுளி

தடுமாறிய என்னை அவரே இயக்குகின்றார்! "தமிழ் மொழியின் வெற்றிக்கு பிள்ளையாரும் ஒருமூலகாரணமாவார். விக்கினமெல்லாம் தீர்க்கும் விநாயகப் பெருமானை அவர்கள் வழிபாடு செய்வதால் வெற்றி பெற்றிருக்கிறார்கள், நான் கூட எப்ப எப்ப எனது எதை எழுதினாலும் பிள்ளையார் சுளியுடன் தொடங்கத் தவறுவதில்லை எனது வெற்றிக்கும் அதுகூட ஒரு காரணமே!"

அவரது பதில் என்னை அதிசயிக்கச் செய்கின்றது, எவ்வளவு கூர்மையாக எமது மொழியை, எமது கலாச்சாரத்தை கவனித்து வருகின்றார் மாரியா.

அவரது பதில்கள் மிக மெதுவாகவே வருகின்றன பேசுமுன் யோசி என்பது கூட அவர் வாசித்ததில் ஒன்றாயிருக்குமோ! அவரது உரையாடல் சுவாரஸ்யம் ததும்புவது. தமிழ் கொச்சையாக இருந்தது. முற்றிலும் தமிழுக்குப் புதியவர் என்பதை சொல்லாமல் சொல்லியது.

## தமிழ்க் கலாச்சாரம்

மாரியா! உங்களுக்கு எமது கலாச்சாரம் பிடிக்குமா என்றேன்!

நிச்சயமாக! என்னை நேரில் சந்திக்க முடிந்தால் அது நிரூபணமாகும். தமிழ்ப் பெண்களைப்போல் சேலைகட்டுவது எனக்கு நன்கு பிடிக்கும். இப்ப கூட சேலைதான் அணிந்துள்ளேன்! ஒரு முறை கட்டி முடித்தால் அதிலே சில அவிழ்ப்பதேயில்லை. வேறுசேலை இல்லை என நீங்கள் நினைக்க வேண்டாம் ஆனால் அதைச் சுற்றி சுற்றிக் கட்டுவது இலகுவான வேலையல்ல எனது வீட்டின் அலங்காரம் கூட கூடுமானவரை தமிழ் உலக வீட்டின் அலங்காரங்களைப் போன்றதாகவே அமையும் வகையில் செய்துள்ளேன்.

நீங்கள் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு சென்றிருக்க முடியாதே- எவ்விதம் அவர்களது அலங்கார முறைகளை பின்பற்ற முடிகின்றது?

"நான் அறிந்த வரையில் புத்தகங்களும் நாவல்களும் தான் உங்கள் இனத்தை இலகுவாகப் புரிந்து கொள்ள ஒத்தாசை அளிக்கின்றன.

நான் வாசிக்கும் கதைகளில் வரவேற்பறையை வர்ணிக்கும் போது என்னவிதமான அலங்காரம் செய்யப்பட்டுள்ளது என்பதை ஓரளவுக்குப் புரிந்து பெர்லின் நகரக்கடைகளில் அவற்றுக்காகப் படையெடுப்பேன்.

மேலைநாடுகளில் எமது நடன நிகழ்ச்சிகள். திரைப் படங்கள் சர்வசாதாரணமாகப் பெருகி வருகின்றனவே உங்களால் பார்க்க முடிந்ததா?

கதகளிநாட்டியம் மாத்திரம் பார்த்தேன் அதிகமான தமிழர்கள் இருக்கும் பகுதிகளில் மட்டுமே நீங்கள் சொன்னவற்றைப் பார்க்க முடியும் ஆனால் பெர்லின் பகுதியில் எனக்குத் தெரிந்து ஒரு தமிழனுமேயில்லை. அதனால் என்னால் பார்க்கவும் முடிவதில்லை.

தமிழில் தத்துவங்கள், சரித்திரம், சமயம் உடையலங்காரம், கலாச்சாரம் சங்கீதம் போன்றனவற்றை நான் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்

தொலைபேசித் தொடர்பு எனக்குத் தந்தநேரம் காலாவதியாகி விட்டதாகக் கூறவும், மேலும் நீடிக்கின்றேன். தமிழ்த் தெரியாதவர் தமிழ்ப் பேசும் பொழுது அதில்தான் எவ்வளவு இனிமை! அதில்த்தான் எவ்வளவு சுவாரஸ்யம்!!

தன்னிடம் சில தமிழ்ப் பாடல்கள் இருப்பதாகக் கூறும் மாரியா, நாணத்தாலே கால்கள் பின்னப் பின்ன என்ற பாடலைப்பாடி ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குமாறும் கூறுகின்றார். முடிந்தளவிற்கு செய்து முடிக்கின்றேன்.

## வேற்றுமொழிகள்

உங்களுக்குத் தெரிந்த ஏனைய மொழிகள் எவை?

லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், பிரஞ்சு, ஆங்கிலம், அத்துடன் கூடவே கொஞ்சம் கொஞ்சம் பாளியும், ரஷ்யனும் தெரியும் என்கின்றார்.

தமிழில் நீங்கள் வாசித்த புத்தகங்கள் ஏதாவது? ஆமாம்! திருக்குறள், அப்பர், சுந்தரர், சம்பந்தர் வாசித்தேன் எனக் கூற முடிக்கின்றார். சற்று நேரம் மௌனம் நிலவவே என்னைப் பயம் ஆட்கொள்கின்றது. அவர் திருக்குறளைப் பற்றியோ அப்பரைப் பற்றியோ என்னிடம் கேட்டால்...!

அதற்கு முன்னதாகவே நான் முந்திக் கொள்கின்றேன். தமிழ் மொழியில் ஆழமானவற்றைக்கூட உங்களால் சீரணிக்க முடிகின்றதா?

மேலும் மௌனம் தொடர்கின்றது. தொலைபேசியில் தான் ஏதோ பிழை என நினைத்த எனக்கு, தாமதமாகவே அவர் கூறுகின்றார்.

நீங்கள் கேட்டது எனக்கு விளங்கவில்லை என்று! எனது கேள்விக்கான பதிலும் இதிலேயே அடங்கியதாகக் கருதிய நான் எவ்வளவு வரை படித்ததாக வினவுகின்றேன்.

நான் Indology (?!) யுனிவசிட்டிவரை படித்துள்ளேன். இது பழைய கலாச்சாரங்களைப் பற்றியும் சாகித்தியத்தைப் பற்றியும் கொண்டதாகும்

கதகளி பார்த்ததாகக் கூறினீர்களே? இலகுவில் விளங்கியதா?

அருகில் இருந்த ஒருவர் எனக்கு விளங்கப்படுத்தியதால் எனக்குச் சிரமமிருக்கவில்லை மாறாக நன்றாக ரசிக்க முடிந்தது.

உங்களுக்கு கல்யாணமாகி விட்டதா?

கல்யாணமானது மட்டுமல்லாமல் விவாகரத்தும் செய்து விட்டேன்.

உங்களுக்குப் பிள்ளைகள்?

தற்பொழுது நான்காம் வகுப்புப் படிக்கும் ஒன்பது வயதுடைய அஸ்திரிட் தான் எனது ஒரே மகள்

உங்களது வயது?

35 வயதாகிறது.

எமது நங்கைகள் என்றால் இப்படியான ஒரு கேள்விக்கு 18 வயதைத்தாண்டியிருக்கமாட்டார்களே என்று யோசித்துக் கொண்டே பெற்றோரைப்பற்றியும் அவர்களது உழைப்பைப்பற்றியும் கோருகின்றேன்.

லைமார் என்ற ஊரில், ஓய்வூதியம் பெற்று ஆறுதலாக வாழ்கின்றார்கள் எனது பெற்றோர்கள் என்கின்றார்.

## கனவுகளின் சின்னம்

தமிழில் நன்கு பேசுவதற்கும் வாசிப்பதற்கும் முடிகின்றதா?

கொஞ்சம் கொஞ்சம் பேச முடிகின்றது. —இது அவர் சொல்லாமலே எனக்குப் புரிகின்றது. வாசிக்க ஓரளவிற்கு முடிகின்றது என்கிறார். உங்களது வாழ்வின் ஆசைக்கனவு எனவு ஏதாவது...?

இந்தியாவும், அதன்மக்களும வாழ்வு முறையும தமிழும். பாடல்களும், எனது கனவுகளின் சின்னமாகும். கூடவே முறையாக பிள்ளையார் வழிபாடுபற்றியும் அறியத் துடிப்பது எனது சிந்தையில் பிரதிபலிப்பாகும்.

வெளிநாட்டுத் தமிழர்கள் உங்களுக்கு எந்த விதத்தில் உதவமுடியும்?

தமிழை வளர்க்குவிக்கும் சிறிய செய்திப் பத்திரிகைகளையோ, புத்தகங்களையோ, நாவல்களையோ, கவிதைகளையோ அனுப்பிவைப்பின் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவளாவேன். எனது அறிவுச் சுடரைத் தூண்டிவிடும் பெரியவர்களாவார்கள் அவர்கள்– என்றவர் முகவரியையும் சொல்லுகின்றார்–

திருமதி மாரியா ஹெர்மன்,
1055, BERLIN WINS STRASSE-51,
G. D. R.

நீங்கள் வெளிநாடுகளுக்குப் போனதுண்டா?

தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு செல்ல யோசித்தாலும் எனது அரசின் தடையும் இந்நாட்டுச்சட்டதிட்டங்களும் கம்யூனிஸ நாடுகள் தவிர்ந்த எவற்றுக்குமே என்னைச் செல்லவிடாது தடுத்து நிற்கின்றன.

தமிழர்கள் என்று எவர் வந்தாலும் தாம் இன்முகம் காட்டி உபசரிக்கத் தவறுவதில்லையாம்.

தமிழ் மொழியில் புத்தகங்களைத் தேடி பல்முறை கிழக்கு ஜெர்மனியிலுள்ள இந்தியத் தூதுவராலயத்துக்குப் படையெடுத்ததாக கூறும் மாரியா அங்குள்ள வங்காள, இந்திப் புத்தகங்கள் பெரிதும் ஏமாற்றத்தை அளித்து வந்தனவாம், ஆனால் அவர்களுடன போராடியதன் விளைவாக தமிழக அரசின் 'தமிழரசு' ஏடு தொடர்ந்து கிடைத்து வருகிறதாம்.

—அவர் ஒரு அதிசயப் பிறவி என்கின்றேன் நான்.

—எனது தொடர்பைக் கவனித்த நண்பரொருவர் அவர் ஏன் ஒரு கம்யூனிஸ உளவா

(6-ம் பக்கம் பார்க்க)




# சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான பிரச்னைகள்

ச. அம்பிகைபாகன்

இலங்கையில் சர்வகலாசாலை சம்பந்தமான பல பிரச்னைகள் மறுபடியும் இப்பொழுது தலைதூக்கியுள்ளன இவற்றுக்கெல்லாம் காரணம் இலங்கை, சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான விஷயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பதே ஆரம்பக்கல்வியிலும் நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளி சம்பந்தமான கல்வியிலும் இலங்கை மிக முன்னேறியிருந்த போதிலும், நமது அயல்நாடான இந்தியாவோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, சர்வகலாசாலைக் கல்வியைப் பொறுத்தவரை நாம் மிகவும் பின்தங்கியநிலையில் இருக்கிறோம். இந்தியாவில் 1857-ம் ஆண்டிலேயே சென்னை, பம்பாய் கல்கத்தா முதலிய இடங்களில் சர்வகலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன ஆனல் நமது நாட்டில் 1921-ம் ஆண்டில் தான் கொழும்பில் முதற் சர்வகலாசாலைக் கல்லூரி (University College) தாபிக்கப்பட்டது இதுவும் லண்டன் சர்வகலாசாலையோடு இணைக்கப்பட்ட கல்லூரியாகும். ஆனல் யாழ்ப்பாணம் இவ்விஷயத்தில் ஒரு புறநடையாகவிருக்கிறது

யாழ்ப்பாணத்தில் 1823-ம் ஆண்டிலேயே சர்வகலாசாலை நீர்மையதான ஒரு கல்வித் தாபனம் நிறுவப்பட்டது. நானிங்கு குறிப்பிடுவது அமெரிக்கன் மிஷனரிமாரால் தாபிக்கப்பட்ட செமினறியையே (Batticotta Semirary) இந்தத் தாபனத்தைப் பற்றி நான் விவரிக்கிறதிலும் பார்க்க இதனை 1848-ம் ஆண்டும் பார்வையிட்ட அக்காலத்து கலனியாட்சிச் செயலாளர் (colonial secretary ஏமேர்சன் ரெனென்ற் (Eme sonTennent) கூறியிருப்பதை எடுத்துக் காட்டுவது பொருத்தமென எண்ணி அதனை இங்கு தருகிறேன்.

வட்டுக்கோட்டையிலுள்ள முழுத்தாபனம் மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணும் ஒரு தாபனமாகும். அதன் தோற்றம் மறக்கமுடியாதது. மனதில் ஆழமான பதிவை ஏற்படுத்தக்கூடியது. ஒருபுறம் உயர் கல்விக்குரிய ஒழுங்கு முறைகளும் பொருட்களும் காணப்படுகின்றன. மறுபுறம் மாணவருடைய கவர்ச்சிகரமான தோற்றமும் உடைகளும். அவர்களுடைய உறைவிடங்கள் கீழைத்தேச வாழ்க்கை முறைக்குரிய தனிப்பண்புகளைக் காட்டி நின்றன. உறங்குமறைகள், உணவருந்தும் சாலை, சமையலறை ஆகியவை தூய இந்தியப் பாணியில் இருந்தன. எல்லாம் மிகச் சுத்தமாகக் காணப்பட்டன. இந்த உறைவிடப்பகுதியை விட்டு வெளிச்செல்ல இதைவிட முற்றிலும் வேறுபட்ட தன்மையுடையதாக நமக்குப் பழக்கமான பண்புகளையுடைய விரிவுரையறை காட்சியளித்தது. அங்கு வானநூற் கடிகாரம், கோள் மண்டலக் கருவி ஆகியவை காணப்பட்டன. ஆய்வுகூடத்தில் இரசாயனப் பொருட்கள், கொள்கலங்கள், மின்காந்தக் கருவி ஆகியவை இருந்தன. நூதனசாலையில் இலங்கையின் பவிச்சரித்திரவியலை விளக்கத் தக்கவகையில் கனிப்பொருட்களும் கடற்பாறை வகைகளும் ஒழுங்குபடுத்திவைக்கப்பட்டிருந்தன. ஆனல் இவற்றையெல்லாம்விடக் கூடுதலான கவர்ச்சியுடைய இடமாக அமர்ந்தது அரங்கசாலையர்கும். அங்குள்ள வாங்குகளிலே நிரையாக வெண்ணிற ஆடைகளுடனும் தலைப்பாகைகளுடனும் ஆவலாக உட்கார்ந்திருந்தனர் மாணவர்—'கருங்காலியிற் செதுக்கப்பட்ட திருவுருவம்' எங்கள் முன்னிலையில் நடைபெற்ற பரீட்சை, வரலாறு இயற்கைத்தத்துவம், கண்ணொளியியல், வானநூல், வீச கணிதம் ஆகிய பாடங்களிலே நடைபெற்றது. மாணவர்கள் காட்டிய அறிவு எம்மை அதிசயிக்கச்செய்தது. இங்கு ஊட்டப்படும் கல்வியையும், வெற்றிகரமான கல்விமுறையையும் எடுத்துக்கொண்டால் வட்டுக்கோட்டையிலுள்ள உயர்கல்வி நிறுவனம் ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் பலவற்றுடன் சமமாக வைத்தெண்ண உரிமை உடையது எனலாம். இது வெறும் புகழ்மாலையன்று' (யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்டபோது வெளியிடப்பட்ட மலரிலிருந்து எடுக்கப்பட்டது.)

இக்கல்வித்தாபனத்தின் தரத்தை எடுத்துக்காட்டுவதற்கு இன்னுமொரு விஷயத்தைக்குறிப்பிடவிரும்பகிறேன். 1857-ம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலை தாபிக்கப்பட்டு முதற் பரீட்சை நடைபெற்றபோது, இதில் தேறிய முதலிருமாணவர்களும் யாழ்ப்பாணத்துச் செமினறியில் படித்து வெளியேறிய சி. வை. தாமோதரம்பிள்ளையும், கரொல் விஸ்வநாதபிள்ளையுமாவர்.

இச்சிறந்த தாபனத்தை கிறிஸ்தசமயத்தைப் பரப்புவதற்குப் போதிய உதவி புரியவில்லை என்னுங் காரணத்தால் 1855-ம் ஆண்டில் மிஷனரிமார் மூடிவிட்டனர். இதன் பின்னர் இதுபோன்ற நாட்டுக்கேற்ற உயர் கல்வித் தாபனம் தோன்றவில்லையென்றே கூறவேண்டும் மாணவர் வசித்த இடம் இந்திய பண்பாட்டுக்கேற்றதாயும், அவர்களின் உடை தேசிய உடையாயிருந்ததையும், இங்கு குறிப்பிட வேண்டும்.

## தமிழில் வைத்தியக் கல்வி

மேனாட்டு வைத்திய முறையை முதலில் தமிழில் போதித்த பெருமை டாக்டர் கிறீன் என்னும் அமெரிக்கரைச் சாரும். டாக்டர் கிறீன் இதற்கென பலவைத்திய நூல்களை தமிழில் எழுதி வெளியிட்டனர். இவர் தமக்கு வேண்டிய கலைச் சொற்களை எவ்வாறு தமிழில் ஆக்கிக் கொண்டார் என்பது இன்றும் ஆராயப்படவில்லை யாழ்ப்பாணத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வைத்திய பீடம் இத்துறையில் ஈடுபட்டால் இவர்களுக்கும்- இவர்கள் தமிழில் வைத்தியக் கல்வியைப் போதிக்க வேண்டியிருப்பதால் நாட்டுக்கும் பிரயோசனமாயிருக்கும். யாழ்ப்பாணக் கல்லூரிக்கு விஜயம் செய்த பொழுது தெ. பொ. மீனுட்சிசுந்தரனர், டாக்டர் கிறீன் தமிழுக்கு ஆற்றிய சேவையை விரிவாக ஆராய வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினர்.

## சர்வகலாசாலைக் கல்லூரி

1921-ம் ஆண்டில் சர்வகலாசாலைக் கல்லூரி தாபிக்கப்படும் வரையில உயர்கல்வி பெற விரும்பிய இலங்கையரில் வசதிபடைத்தோர் இங்கிலாந்து இந்தியா முதலிய நாடுகளுக்குச் சென்று கல்வி கற்றனர். தாங்கள் கல்லூரியில் படித்த காலத்தில் எங்களுக்கு ஆசிரியர்களாயிருந்தவர்களில் பெரும் பாலாேனர் இந்தியாவில் கல்விகற்று பட்டம் பெற்றவராவர்.

அரசியல் விடுதலைக்குப்போல், இலங்கையில் ஒரு சர்வகலாசாலை தாபிக்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சிக்குத் தலைவராக விளங்கியவர் சேர். பொன்னம்பலம் அருணசலம் அவர்களே. அவர்கள் செய்த பிரசாரத்தின் பயனக 1906ம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலைச் சங்கம் தாபிக்கப்பட்டது. பல இனத்தவர்களைக் கொண்ட இச்சங்கத்துக்கு சேர். பொன். அருணசலம் அவர்களே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் இச்சங்கத்தின் முயற்சியினலேயே 1921ம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரி தாபிக்கப்பட்டது. இச்சங்கம் ஒரு சஞ்சிகையையும் நடாத்தி வந்தது. இச் சஞ்சிகையின் இதழ்கள் இலங்கையில் கல்வி வளர்ச்சியை அறிவதற்கு மிகவும் பிரயோசனமுளதாகக் காணப்படுகிறது.

இலங்கைச் சர்வகலாசாலை நிர்வாகத்தில் சேர். அருணசலம் பெரும் பங்கெடுத்தார். இப்பொழுது பேராதனை வளாகத்தில் காணப்படும் பெரும் நூல் நிலையத்துக்கு வித்திட்டவர் இவரே அகால மரணமடைந்த தமது மகன் பத்மநாபா பெயரால் அவர் சேகரித்துவைத்திருந்த நூல்களை சர்வகலாசாலைக் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார்.

இக் கல்லூரி லண்டன் சர்வகலாசாலையோடு இணைக்கப் பெற்றிருந்தபடியால் இலங்கைக்குஏற்ற ஒரு பாடத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை- ஆனல் இங்கு சிறந்த பேராசிரியர்கள் கடமையாற்றினர். பேராசிரியர் மார்ஸ் (Marrs) என்பவர் அதிபராயிருந்தார். ஆங்கிலமே போதனு மொழியாகவிருந்தபடியால் மாணவர் இன, சமய பேதமில்லாமல் பழகிக் கொண்டனர். இக் கல்லூரி மாணவர்கள் பல விடுதிச்சாலைகளில்வசித்து வந்தனர். இவற்றுள் ஜூனியன் விடுதிச்சாலை மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு பல இன, சாதி, சமயத்தைச் சேர்ந்தவர்கள் அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தனர். இவ்விடுதிச் சாலைக்கு பேராசிரியர் சுந்தரலிங்கம் மேற்பார்வையாளராக விருந்தார். இவர் சங்கடங்களில் மாட்டிக் கொள்ளும் மாணவரை மீட்பதிலும் வசதி குறைந்த மாணவருக்கு உதவி செய்வதிலும் முன்னின்று சகல மாணவரின் அன்பையும் மதிப்பையும் பெற்றார்.

இக்கல்லூரி இலங்கைச் சர்வகலாசாலை தாபிக்கும் வரைக்கும் ஒரு தற்காலிக ஒழுங்காகவே கருதப்பட்டது. சர்வகலாசாலைச் சங்கம் தொடர்ந்து செய்த வாதப்பிரசாரம் காரணமாகவும், கல்லூரி நிர்வாகசபை எடுத்த முயற்சியினலும் அரசாங்கம் 1924-ம் ஆண்டு கொழும்பு புல்லேர்ஸ் வீதியிலுள்ள (Buller's Road)இடத்தில் சர்வகலாசாலை நிறுவ முடிவுசெய்து இதற்கென ரூபா 3,000,000 ஒதுக்கியது பேராசிரியர் மார்ஸ் சர்வகலாசாலை அமைப்பதற்கு வேண்டிய சட்டங்களையும் பிரமாணங்களையும் தயார்செய்தார். இச்சந்தர்ப்பத்தில் எதிர்பாராத முறையில் ஒரு புதுப் பிரச்னை எழுந்தது அரசியல் தலைவர்களில் ஒரு சாரார் சர்வகலாசாலையை கண்டியில் அமைக்க வேண்டுமெனக் கிளர்ச்சிசெய்தனர். இவ்விஷயம் மறுபடியும் சட்ட நிரூபண சபையில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. இது பற்றி அடுத்துக் கவனிப்பாம். (வரும்)

# தமிழ் படித்து

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

னியாக இருக்க முடியாது என்கின்ருர்?

—எது சரி?

ஈற்றில் விடைபெற முயர்சித்த வணக்கம் மாயா எச்கின்றேன் வணக்கம் ஐயா எனத் தூய தமிழில கூறிய அவர், துர்க்கா பூஜாவிற்கு எனது வாழ்த்துக்கள் என்கிருர்,

தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது,

நான் தொலைபேசியை வைக்கவில்லை. நவாரத்திரி என்பதுகூட மறந்து பேச்சு. ஆனல் அவர் எதையுமே மறக்கவுமில்லை. மறைக்கவுமில்லை.

எனது நண்பர் ஒருவர் எதிர்படுகின்ருர். வணச்கம் என்கின்றேன். குட்ஈவினிங் தான்பதிலாகின்றது.

# உலகம் சமநிலை பெறவேண்டும்

அண்டம் பிளந்து அதிர்ந்து வெடித்தது
பெண்டுகள் பிள்ளைகள் பொசுங்கிச் சாம்பினர்
விண்ணுயர், புளுதி மண்டலம் எழுந்தது
அண்டை நாட்டான் [அணு] குண்டு வெடித்தது

ஆயிரமாயிரம் மக்கள் மடிந்தனர்
காய்கிற வெப்பம் உடலை எரித்தது
மாய்க்கிற குண்டோ மூசிப் பாய்ந்தது
சாய்ந்தது உலக சனத்தொகை நன்ருய்

ஆற்றிலும், நீரிலும் கதிர்கள் கலந்தன
சாறறு வழியிலும் மக்களைத் தேடின
ஊற்று நீரிலும் புகுந்து ஒளிந்தன
சாற்று மரங்களில் பதுங்கி இருந்தன

ஆண்டுகள் பலது அடுத்தடுத் தோடின
குண்டுடன் கதிர்கள் குறைந்தன என்று
அண்டை மனிதன் வந்து புகுந்தனன்
திண்ணி பழங்களைப் பறித்து சுவைத்தனன்

பதுங்கிய கதிர்கள் பழத்தால் பாய்ந்தன
முடங்கிய பிள்ளைகள் பிறந்து மடிந்தன
அடங்கிய கதிர்கள் சந்ததி அளித்தன
இடுங்கிய சனத் தொகை இன்னும் குறைந்தது

அன்றோர் யுகத்தில் கண்ணன் பிறந்தனன்
வென்று வரவே சக்கரம் எடுத்தனன்
குன்றெனப் பிணங்கள் குவிந்து அழிந்தன
அன்றைய உலகம் சமநிலை பெற்றது.

பின்னேர் யுகத்தில் கோதண்டம் பிறந்தன
முன்னைய சமநிலை மீட்டுக் கொடுத்தது
இன்றைய யுகத்தில் குண்டுகள் தோன்றின
விஞ்ஞான சமநிலை மீட்டுக் கொடுத்தது

- வடகோவை வரதராஜன்

ஞானத்தமிழ் - 46

# நல்வினையே செய்வோம்

வ. குகசர்மா

"நன்றுந்தீதும் பிறர்தரவாரா" என்பது ஆன்றோர் கொள்கை. எங்களது அனுபவங்களுக்கும் வாழ்க்கையின் போக்கிற்கும் நாங்களே காரணம் ஆகிறோம்.

## உலகம் வாழ்வது

இந்த உலகம் எதனல் வாழ்கிறது என்ற கேள்விக்கு ஒரு சிறந்த விடையை புறநானூறு கொடுக்கிறது. "புகழ் எனில் உயிரும் கொடுப்போர் பழி எனில் உலகம் முழுவதும் பெறுவதாயினும் கொள்வார் அயர்விலார், சினமில்லார் அமுதமே கிடைப்பதாயினும் தனியே உண்ணுர், தமக்கென எதுவும் செய்யார். பிறர்க்கென வாழும் உண்மையான இயல்புடையர் அத்தகையராலே வாழ்கிறது உலகம்" என்பது அந்தவிடை.

## தீவினைவேண்டாம்

நல்வினைகளைச் செய்ய முடியாவிட்டால் போகட்டும். தீவினையாவது செய்யாமல் இருக்கலாமல்லவா? "தீங்கு யாவருக்கும் செய்திடாதவர் தாங்கள் துன்புறுர்" என்பது கந்தபுராணம் நரிவெருத்தலையார் என்னும் புலவர் கூறும் நல்மொழியைப் பார்ப்போம். "நல்வினைகள் செய்ய மாட்டீராயினும் தீவினையாவது செய்யாது விலக்குங்கள், உம்மையாவரும் புகழ்வதற்கும், உம்மை நல்வழியிலே செலுத்திஉய்யுமாறுசெய்வதற்கும் அதுவே ஏற்ற வழியாகும்."

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படும் நெறியுமற் றதுவே"

என்பது புறநானூற்றுச் செய்யுள்.

## யானைவேட்டை

தம்மாலும் நல்வினை செய்ய முடியுமா? என நினைப்பவர் பலர். இவர்கள் தெளிவும் துணிவும் அற்றோர். யானை வேட்டைக்குப் போகும் உரமுடையன் யானையையே வெற்றி கொண்டு வருவான். ஆனல் குறும்பூழ் எனப் பெரிய காடைவேட்டைக்குச் செல்பவன் அதைக் கைவிட்டு வருதலும் கூடும்.

(9-ம் பக்கம் பார்க்க)

சந்திப்பு : 3

# எம். ஜி. ஆர். எனும் மூன்றெழுத்து

## M. G. R.

இந்த மூன்று எழுத்துக்குத்தான் எத்தனை மதிப்பு; எத்தனை வேகம்; எத்தனை அவர்ச்சி!

படஉலகை எடுத்துக்கொண்டால், ஹொலிவூட்டில் மட்டும்தான் 'எம். ஜி. எம். (புரடக்ஷன்ஸ்)' பற்றித் தெரியும். அரசியல் உலகில் "எம். ஜி. எம்.' என்றால்...றாத்தல் என்ன விலை என்றுதான் கேட்பார்கள். ஆனால் எம். ஜி. ஆர். பட உலகில் மட்டுமல்ல, அரசியலிலும் வெளுத்து வாங்குகின்றார்!

பட உலகில் எம். ஜி. ஆர். ஒரு வசூல் மன்னன் என்றால் அரசியலில் ஒரு ஈர்ப்புச் சக்தியாக-காந்தமாக இப்பொழுது அவர் திகழ்கின்றார். இதனை மறுக்கமுடியாது; மறைப்பதும் நல்லதல்ல.

நடிகராக இருந்து, வசூல் மன்னனாகி, இன்று அரசியலிலும் உச்சநிலையை அடைந்திருக்கும் எம்,ஜி. ஆரை—

"ஒரு கவர்ச்சி அரசியல்வாதி" என்று சொன்னாலும் பரவாயில்லை. காரணம்—

கவர்ச்சியிலிருந்து அரசியலுக்கு வந்தவர்தானே அவர்!

எம். ஜி. ஆரைப் பற்றி நான் எழுதும் இக்கட்டுரை, மூன்று கட்டங்களைக்கொண்டது.

முதல் கட்டம்—அவர் முதலமைச்சராக வர முன்னர் அ. இ. அ. தி. மு. கழகம் அமைந்து அரசியலில் "காலடி" எடுத்துவைத்து, லோக சபைக்குள் (இந்திய பாராளுமன்றத்தில்) நுழைந்த காலகட்டத்தைக் கொண்டது. இரண்டாவது கட்டம்—அவரது தமிழக சட்டசபை பிரவேசம். மூன்றாவது கட்டம்—முதலமைச்சராக 'முடி' சூடிய பின்னர் சுடச்சுட நிலவிய காலப்பகுதி.

உண்மைகள் பொதுவாக இனிப்பதில்லை. ஓரளவு கசக்கத்தான் செய்யும். இதுபோல் நான் எழுதும் எம். ஜி. ஆர். கட்டுரையும், சில உண்மைகளைக் கொண்டது. ஏனென்றால் இத்தொடரில் 'டுப்' எதுவும் இல்லை. எல்லாமே 'ஒரிஜினல்'தான். எனது நேரடி அனுபவத்திலிருந்து கிடைத்தவை.

'A MASS MAN' என்று வர்ணிக்கப்படும் 'ஒரு மக்கள் மனிதனை'ப் பற்றி எழுதும்போது பல உண்மைகள் வரத்தான் செய்யும். இது சிலருக்குக் கசக்கும்; பலருக்கு இனிக்கும். இந்தப் பசுமையான நினைவுகளுடன் நான் இங்கு எழுதுகின்றேன்...

### 1

திராவிட முன்னேற்றக் கழக உறவைத்துண்டித்து, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தை அமைத்து, இந்திய பாராளுமன்றம் எனப்படும் இந்திய லோக சபைத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிகரமான தீர்ப்பையும் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு தமிழக சட்டசபைத் தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்த 'கணக்குப்'ப்பார்த்துக்கொண்டிருந்த நேரம் அது. இதுமட்டுமல்ல, படப்பிடிப்புகளிலும் தீவிரமாக அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலம் அது! இந்த நேரத்தில்தான் நானும் எம். ஜி. ஆரை (முதல்தடவையாக) சந்திக்கத் திட்டமிட்டேன்.

எம். ஜி. ஆரை சந்திப்பதில் வழக்கமாகச் சில 'மரபு'கள் உண்டு என்பது எனக்குத் தெரியும். இதிலிருந்து தப்பி, வேறு வழியாக அவரைச் சந்திக்க முயல்வது (சந்திக்கலாம்: பேட்டி காணவேண்டுமே!) பலனைத் தராது என்பதையும் நான் அறிவேன்.

முதலில் அ. இ. அ. தி. மு. கழக தின ஏடான எம். ஜி. ஆரை ஆசிரியராகக் கொண்ட 'அண்ணா' பத்திரிகை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள விரும்பினேன். இப்பத்திரிகையில் ஒருவேளை 'இவர்கள்'கடமையாற்றலாம் என்ற நினைப்பில், ஒிருவரை மனதில் வைத்துக்கொண்டு

### மகான்

நான் தங்கியிருந்த 'எக்மோரி'லிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டேன்.

"ஹலோ...அண்ணா பத்திரிகை...யார் பேசுறது..."

என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு;

"நீங்கள் யார் என்று கூற முடியுமா?" என்று கேட்டு விட்டு,

"பதில் ஆசிரியர் மிஸ்டர் சோலை இருக்கிறாரா?"

"நீங்க சிலோன் தானே..." என்றார் திரு. சோலை.

"சோலைதான் பேசுறன்...

(வளரும்)

# கலைமஞ்சரி

## நெஞ்சு பொறுக்குதில்லை

நீலநிறச் சேலைதனை சுற்றிக்கட்டி
நெடும்பச்சை நிறத்தாலே நெஞ்சைமூடி
கோலமகள் எழில்நங்கை யாக நிற்கும்
குமரியவள் ஈழம் எனும் கன்னிமீது
காலம் எனும் கொடும் அரக்கன் சூறைக்காற்று
காதல் கொண்ட போதைவெறி மோகமாக
சிலமுடன் இவள் அழகைச் சிதைத்துச்சென்ற
சிற்றமதை நினைக்கையிலே என் நெஞ்சம்
பொறுக்குதில்லை.

தென்னைமரச் சோலையெல்லாம் அழிந்தகாட்சி
தேனூட்டில் எழில் எல்லாம் சிதைந்தகாட்சி
எண்ணரிய கோபுரங்கள் இடிந்தகாட்சி
ஈடில்லா அவர் உடமை இழந்தகாட்சி
வீதி எங்கும் தெரிகின்ற சோகக்காட்சி
வீடின்றித் தவிக்கின்ற மக்கள் காட்சி
பாடுபட்ட பாட்டாளி கண்ணீர்க்காட்சி
பார்த்திடவே என் நெஞ்சம் பொறுக்குதில்லை.

உணவின்றித் தவித்திடும் மக்கள் வெள்ளம்
உறவெல்லாம் பிரிந்துருகும் நல்லோர் உள்ளம்
சிறகொடிந்த குடிசைகளின் சோகக்கோலம்
சிதைந்தழிந்த சோலைகளின் கோரக்கோலம்
நிறைந்த தனம்பல இழந்து நிற்போர் ஓலம்
நினைக்கையிலே என் நெஞ்சம் பொறுக்குதில்லை.

-சு. பிரபலசிங்கம்
(உருத்திரபுரம்)

## இயற்கை

'நோட்டீஸ்' ஒட்டக்
'கூடா'தென்று
எழுதியிருந்த
மதிற் சுவரில்
வேப்பமரக்
கிளை நிழல்
நோட்டீஸாகப்
படிந்திருந்தது

-நா. ஜெயராமன்

# நடிப்புக் கலை

## ஈ. ஆர். திருச்செல்வம்

நடிப்புக்கலை என்றால் என்ன?

ஒரு பாத்திரத்தின் உள்ளார்ந்த குணாதிசயங்களைத் தனது நடிப்பின் மூலம் வெளிக்கொணரும்போதுதான் நடிப்பும் முழுமை பெற்று, ஆக்கபூர்வமான நடிப்பாக மாறுகின்றது. இந்த நிலையில், ஒரு நடிகனுக்குரிய அத்தியாவசியத் தேவைகளும் சில உண்டு. உணர்திறன், கற்பனை, கவனம், அவதானம், இசை வாக்கம், ஒலி, மொழி, உடல்வளம் ஆகியன நடிகனுக்கு முக்கியமாகும்.

நீங்கள் இங்கு படிக்கப்போகும் இக்கட்டுரையில் பல உண்மைகள் பளிச்சிடும்: சுவையுங்கள்.

நடிப்பதன் மூலம் இலகுவாக நடிக்கப்பழகிக்கொள்ளலாம் என்ற அபிப்பிராயம் சிலரால் தெரிவிக்கப்படுகின்றது.

அப்படியாயின் மத்தியமாவதி இராகத்தை வீணையில் மீட்டியவுடன் அந்த இராகத்தைப் பற்றிய எல்லா இயல்புகளையும் விளக்கமாக அறிந்துகொண்டதாகக் கூறமுடியாது. சங்கீதம் படிப்பவர் மத்தியமாவதியை வீணையில் வாசிப்பதற்கு முன் சுரவரிசைகளை முதலில் பழகிக்கொள்ளவேண்டும். பல அப்பியாசங்களின் பிறகுதான் இராகங்கள் வீணையில் கைகூடும். இதேபோன்று பல அப்பியாசங்களின்மூலம் நடிகன் முதலில் தன்னைத்தான் நடிகனாகப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்' அதன் பிறகுதான் அவன் முழுமையான நடிகனாகமுடியும்.

மனித நடத்தைகளையும், உணர்வுகளையும் இன்னொருவருக்கு அல்லது மற்றவர்களுக்கு நடித்துக்காட்டவேண்டியது ஒரு நடிகனின் கடமை. நாடகத்தில் சித்தரிக்கப்படும் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கும் பாத்திரத்தின் தன்மைக்கும் ஏற்ப நடிக்கவேண்டும் என்பதை நடிகன் புரிந்துகொண்டிருக்கவேண்டும். ஒரு பாத்திரம் தாங்கி நடிக்கும்போது பல தடைபாடுகள் ஏற்படுகின்றன காரணம் மனித நடத்தைகள் வேறுபட்டவை; ஆளுக்கு ஆள் பாரிய வித்தியாசம் உண்டு. முகபாவம், தோற்றம், குரல் இவை யாவும் சிக்கலானவை. நடிப்பின் எல்லாத்துறைகளிலும் தொடர்பான இவ்வாறான இயல்புகளை அலகுகளாகப் பிரித்து நடிகனுக்குப் பயிற்சி அளித்து பிற்பாடு நடிக்கும்போது ஒன்றிணைத்து முழுமையாகச் சிருஷ்டிக்கலாம் என்று நாம் கருதுவதுமுண்டு. இவ்வாறான பயிற்சி நடவடிக்கைகள் எதிர்பார்க்கின்ற விளைவைத் தராது. இப்படியான பயிற்சிமுறை மேல்நாடுகளில் நீச்சல் பயிற்சி வகுப்புகளில் கையாளப்பட்டுவந்தது. இத்தகைய முறையினால் பயிலுனர் நீச்சலில் பூரணத்துவத்தை நோக்கி முன்னேறுவதில்லை.

நடிப்பில் உண்மையான பரிச்சயமுடைய எவரும் தான் கடந்த காலத்தில் அனுபவித்த ஓர் உணர்வை தன் உள்ளத்தில் மீண்டும் கொணர்ந்து அதனை அங்க அசைவுகள், ஒலிகள், சொல்லாடல் போன்ற வெளிக்குறிப்புகள்மூலம் பிறரும் அறியும்படி செய்யவேண்டும். முந்திய அனுபவங்களும் உணர்வுகளும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. சிலர் சில அனுபவங்களை வாழ்க்கையில் பெறாமலும் இருக்கலாம். இந்நிலையில் சிறபம், சித்திரம், இலக்கியம் ஆகிய கற்றலைத் தூண்டும் அழகியற்கலைகளின் உதவியை ஒரு நடிகன் நாடலாம். கலைச் சிருஷ்டிகளில் அடங்கியுள்ள நுட்பமான உணர்வுகளை நடிகன் சரியாக கவனிப்பதன் மூலமும், மற்றவர்களின் நடத்தை பாவனை ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனிப்பதன்மூலமும் நடிகன் தன் நடிப்புக்கலையை வளப்படுத்தி நடிக்கவேண்டுமானால் சோபாவோடு கூடன் வழிக்கப்பட்டிருக்கும் சில பிரதிபலிக்கும் உணர்வுகளை நடிகன் தன் நடிப்பின் போது வெளிப்படுத்தலாம்.

பாத்திரத்தை படிப்பதற்கு உரையாடலை மனனம் செய்தலும், மேடை உத்திகளை அறிந்திருத்தலும்போதும் என்ற எண்ணம் கூடாது. நாடக ஆசிரியர் வார்த்த பாத்திரத்தின் அலாதியான குணவிசேஷங்களை தன் நடிப்பில் முனைப்பாகக் கொண்டுவர நடிகன் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். பாத்திரத்தின் உணர்வுகள், சிந்தனைகள், புலக்காட்சிகள் நாடகத்தில் பாத்திர வளர்ச்சிப் போக்கில் மாற்றத்திற்குள்ளாகின்றன. ஒரு பாத்திரத்தின் உள்ளார்ந்த குணாதிசயங்களை தன் நடிப்பின் மூலம் வெளிக்கொணரும்போதுதான் நடிப்பு முழுமைபெற்று ஆக்கபூர்வமான நடிப்பாக மாறுகின்றது.

எந்தப்படமும் ஒரு நடிகனுக்குத் திறமையைக் கற்பிக்க முடியாது என்றும், நடிப்புக்கலையின் நுட்பமான மாறுதல்களை வெளி உபாயங்கள் மூலம் கற்பிக்க முடியாது என்று கருதுவோரும் உளர். ஆனால், அழகியல் கலைகளிலே திறமையானது முன்கூட்டியே இருக்கத் தேவையில்லை. அது பிறப்புரிமையல்ல. செயல்முறையின் மூலமாகவே எல்லாத் திறமைகளையும் விருத்தி செய்யலாம். குழந்தைகள் வாழ்க்கையை அழகியல் உணர்வோடு ஆரம்பிக்கிறார்கள். அவர்கள், அவர்களது உள்ளமும் உடலும் காலப் போக்கில் அவர்கள் கலைஞர் ஆவதற்குரிய தன்மைகளை உள்ளடக்கியவை. பாவனை செய்தல், கற்பனை செய்தல் எல்லாம் எமது குழந்தைகளுக்கும் புதிதல்ல சிறுர் இராசா—இராணி, கள்ளன்—பொலிஸ் ஆகவும் பாவனை செய்து விளையாடுகிறார்கள்; ஆனால் எமக்கு வழங்கப்படும் கல்விமுறை நாளடைவில் எமது குழந்தைகளைக் குறைபாடு உடையவர்

(9-ம் பக்கம் பார்க்க)

'இராமேஸ்வரம்
முதல்
புதுடில்லி
வரை...'
அந்த 'ரயில்'
மீண்டும்
அடுத்த வாரம்
'ஓடும்'

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 7199, தந்தி: வைரம்.

# இன்றைய மாணவன் நாளைய தலைவன்

இன்றைய குழந்தை நாளைய மனிதன். "நீங்கள் ஆரம்பித்துவைத்ததைத் தொடர்ந்து நிறைவேற்றப்போகிறவன். உங்கள் குழந்தை உங்கள் காலத்தில் நிறைவேற்றியதும் நீங்கள் அத்தியாவசியமென எவற்றைக் கருதினீர்களோ அவற்றை அவன் கவனிக்கப்போகிறான். நீங்கள் உங்கள் விருப்பப்படி எந்தெந்தக் கொள்கைத் திட்டங்களையும் அறிமுகப்படுத்தலாம்? ஆனால் அவை எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகின்றன என்பது அவனில் தங்கியுள்ளது மனித சமுதாயத்தினது விதியே அவன் கையிலுள்ளது." இது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் கருத்து. இது இன்றைய மாணவனை நாளைய தலைவன் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டுகிறது.

## மாணவர்களும் அரசியலும்

அரசியலைப் பற்றி மாணவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். மாணவப் பராயத்தில் அரசியலை நன்கு கற்றுணர்ந்து பின்னர் ஏற்ற காலத்தில் செயற்படுத்தலாம்.

இளம் நெற்பயிரைப் போன்றவனே மாணவன் இவ்விளம் பயிர் முற்றி அதிலிருந்து பெறும் நெல்லைக் குற்றி உண்ணுகிறோம். முதிர்ந்த அரசியல்வாதிகளே அரிசிக் கொப்பானவர்கள் இளம் நெற்பயிரில் இருந்து உண்டாகும் மணியை நாம் உண்ணுவதில்லை அதேபோல் மாணவர்களும் அரசியலில் ஈடுபடக் கூடாது. ஆனால் பஞ்சம் பட்டினி போன்ற சமயங்களில் இளம் நெல்மணிகளை உணவாகப் பயன்படுத்துகிறோம். அதேபோல் அரசியலிலும் சில நெருக்கடியான நிலைமைகளில் மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாம்,

சி. சிறிதரன்
டிரியோவான் கல்லூரி

## பண்ணும் அதன் பண்பும்

### தக்கராகம்

இப்பண் பாலைப் பெரும்பண்ணில் தோன்றிய 'அராகம்' என்னும் திறத்தின் அகநிலையால் பண்வரிசையில் 17-வது எண் பெற்று நிற்பது. தக்கராகப் பண்ணுமாம். இப்பண் முதல திருமுறையில் 23 முதல் 46 வரையுள்ள பதிகங்களிலும், ஏழாம் திருமுறையில் 13முதல் 16 வரையுள்ள பதிகங்களிலும் அமைந்துள்ளது. இப்பண் கார் காலத்திற்கு உரியதாகும். இப் பண்ணுக்குரிய இராகம் 'காம்போதியாகும்.'

## வேதனை களைவோம் விரைந்திடு தோழா!

சட சட என்றே இரைந்தது காற்று
பட பட வென்றே முறிந்தன மரங்கள்
குபு குபு வென்றே புகுந்தது வெள்ளம்
பட பட வென்றே சாய்ந்தன மனைகள்.

எண்ணரும் புகழொடு விளங்கிய வாழ்வு
மண்ணொடு மண்ணாய்ப் புதைந்தது சிதைந்து
கண்ணீர் சிந்திக் கதறிடும் மாந்தர்
நண்ணிய துயரம் துடைப்போம் புறப்படு!

சிதைந்த வாழ்வில் ஒளியேற்றிடுவோம்
புதைந்த மனிதர்க் காய்த்தொழு திடுவோம்
வதைக்கும் பட்டினி தனைப்போக கிடவே
பதைத்து நெஞ்சம் புறப்படு தோழா!

க. கோபிநாத்
டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## அன்புத் தோழன்

[13]

அந்தப் பிரகாசமான வெளிச்சம் விக்கிரமன் இருந்த மரத்தடிக்கு வந்தது. அவ் வெளிச்சத்தை விக்கிரமனால் பார்க்க முடியவில்லை. அவன் கண்கள் கூசின.

''விக்கிரமா''

குரலிலிருந்து வந்திருப்பது வனமோகினி என்பதைத் தெரிந்து கொண்ட விக்கிரமன் மரத்திலிருந்து இறங்கினான்.

''போகலாமா...?'' என்று கேட்டாள் வனமோகினி.

அவளோடு சென்ற விக்கிரமனுக்கு கலக்கமாக இருந்தது. காட்டில் இருக்கவும் பயமாக இருந்தது. வனவிலங்குகளின் பயங்கர உறுமல்களும் கொள்ளிக்காடனது நினைவும் அவனை அச்சுறுத்தின. 'வாரும் ஆபத்து எங்கிருந்தாலும் வரும்தானே' என்று எண்ணியவாறு வனமோகினியோடு புறப்பட்டான் விக்கிரமன்.

சிறிது தூரத்தில் ஒரு சோலை; அதன் நடுவே பெரிய குளம் ஒன்று இருந்தது.

''விக்கிரமா உனது குதிரையையும் நண்பனையும் இங்கே விட்டுச் செல்வோம். எனது பாதுகாப்பில் இருக்கும் இப் பகுதியில் எதுவித ஆபத்தும் நேராது'' என்றாள் வனமோகினி.

சேதுபதி விக்கிரமனின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தது.

''சேதுபதி என்னைப் பிரிந்து ஒரு கணமும் இருக்க மாட்டாது. அதையும் அழைத்துச் செல்வோம்'' என்றான் விக்கிரமன்.

''சரி உன் இஷ்டம். எனது கையைப் பிடித்துக் கொண்டு அதோ அந்தத் தாமரைப் பூவின்மேல் காலைவை'' என்றாள் வனமோகினி.

விக்கிரமன் வனமோகினியின் கையைப் பிடித்துக் கொண்டு அவள் காட்டிய தாமரைப் பூவின் மேல் காலை வைத்தான். மறுகணம் பூ அமிழ்ந்தது. வனமோகினியின் கால்ப்பகுதி மீனின் வாலைப்போல் மாறியது. அவள் விக்கிரமனை இழுத்துக் கொண்டு பாதாளத்தை நோக்கிச் சென்றாள்.

அந்தக் குளத்தில் வனமோகினியைப் போன்று பலர் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தனர்.

''இவர்கள் யார்?'' என்று கேட்டான் விக்கிரமன்.

''இவர்களெல்லாம் என் பணிப் பெண்கள். உன்னை வரவேற்க வந்துள்ளார்கள்'' என்றாள் வனமோகினி.

சிறிது தொலைவில் பெரிய மாளிகை ஒன்று தெரிந்தது. அதன் வாசலில் பல பெண்கள் அணிவகுத்து நின்றனர். விக்கிரமனும் வனமோகினியும் மாளிகை வாசலை அடைந்ததும், இரும்புக் கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன.

பெண்கள் மலர் தூவி அவர்களை வரவேற்றார்கள். அரண்மனைபோல் அம்மாளிகை பெரியதாகவும், அழகாகவும் இருந்

- சி. வி. குணசேகரம் -

[9-ம் பக்கம் பார்க்க]

## தண்ணீர்த் தாகத்திக்கு கிணற்றில் குதிப்பதா?

அரசியலுக்கு மாணவர்களும்; மாணவர்களுக்கு அரசிலும் தேவையில்லை. மாணவர்களுக்குப் போதிய அரசியல்அறிவு பாடசாலைக்காலத்திலேயே புகுத்தப்படுகிறது. அதைவிடுத்து அரசியல் அறிவுக்காகவும், பொதுவிடயங்களை அறியவேண்டுமென்பதற்காகவும் அரசியலில் ஈடுபடவேண்டுமென்பது வேடிக்கையானது.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடின் தமது கல்வியையே பலி கொடுக்க நேரிடும். இச்செயல் தண்ணீர்த் தாகத்தைப் போக்க கிணற்றிலே குதிப்பதற்கு ஒப்பாகும்,

ம. சுரேந்திரநாதன்
மத்திய மகா வித்தியாலயம்
வயாவிளான்.

## பஞ்சம் நேரிட்டால் விதை நெல்லையும் சமைக்கலாம்

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று சொல்பவர்களுக்கு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் அளித்த விளக்கம் ஒன்றை இங்கே கூற விரும்புகிறேன்.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று சொல்வது அவர்கள் எப்பொழுதுமே அரசியலில் கலந்துகொள்ளக்கூடாது என்று அர்த்தமல்ல விதை நெல்லைச் சமைக்கக்கூடாது. விதை விதைந்துப் பின்னர் அறுவடைசெய்து அதிலிருந்து வரும் தானியத்தையே சமையலுக்கு உபயோகப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் விதைநெல்லைப் போன்றவர்களே! அவர்களும் நெல்லாகும் வரை காத்திருக்கவேண்டும். நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் விதை நெல்லையும் சமைக்கநேரிடலாம்.' அதைப் போலவே தேசத்திற்குப் பேராபத்து ஏற்படும் போது மாணவர்களும் அரசியலில் கலந்து கொள்ளலாம்.

இ. இரத்தினதாசன்
கோப்பாய்
கிறிஸ்தவக்கல்லூரி

## அரிசி விலை தெரியாவிடினும்..

கல்வி கற்கும் மாணவர் அரசியலில் புகுதல் கூடாது. அரசியலிலிருந்து விடுபட்டு கல்வி விளையாட்டு, சாரணர் இயக்கம் போன்ற துறைகளிலேயே அதிக கவனம் செலுத்தல் வேண்டும். பாடசாலையை விட்டு நீங்கித் தொழில் தேடும் போது தொழில் தருபவர்கள் எமது திறமையையே எதிர் பார்க்கிறார்கள். அதாவது விளையாட்டுத்துறையிலும் கல்வித்தரத்திலும் ஏற்படுத்திய சாதனைகளையே கேட்கிறார்கள். இதில் முழுதாக ஈடுபடுபவர்களுக்கு அரசியலைப் பற்றிச் சிந்திக்கவே நேரமிராது. அரசியல் மாணவர்களுக்குத் தெரிந்திருந்தால் அவர்களுக்குள்ளேயே பிரிவினை தோன்றி மோதல்கள் ஏற்பட்டு படிப்பில் அக்கறை குன்றிவிடும்.

இன்றைய கல்வித் திட்டத்தில் அரசியலும் ஓரளவு புகுத்தப்பட்டிருக்கிறதே. பொது அறிவுக் கேள்விகளில் அரசியல் பற்றியும் கேட்கிறார்கள். இன்று ஆட்சியாளர்களே அதாவது அரசியல்வாதிகளே சட்டங்களை மாற்றுகிறார்கள். பொதுவாக மாணவர்கள் இவற்றையெல்லாம் அறிந்திருத்தல் நல்லதே.

அரசியலைப் பற்றி அறியாது விடின் வாழமுடியாத நிலையே உருவாகும், அரிசி விலை தெரியாவிடினும் அரசியல் தெரிந்திருத்தல் அவசியம்.

ஏ. ஸ்கந்தராசா
யாழ். கல்லூரி,
வட்டுக்கோட்டை.

## அவளல்லோ அழகு!

பால் போன்ற அழகான வெள்ளை ஆடை
பக்குவமாய் மடிப்புக்கள் கலைந்திடாமல்
பாங்காக நடந்து அவள் பள்ளிசெல்வாள்
பக்கத்தே தோழியரும் நடந்தே செல்வார்
அழகான மதியன்ன வதனந்தன்னில்
அன்பான உள்ளத்தின் ஒளியே சிந்தும்!

வடிவான நுதல் தனிலே சாந்துப்பொட்டு
வாயினிலே கொவ்வை இதழ் வாய்மை பேச்சு
குமின் சிரிப்புக் குறும்பார்வை கூந்தல் மேகம்
குனிந்ததலை நிமிராத குமரிப் பெண்ணாள்
அன்னம் போல் நடந்திடுவாள் நிறத்தில் மின்னல்
என்னென்று சொல்ல அவள அழகைத்தானே!

-ச. ஜெயரஞ்சி
உரும்பராய் இந்துக்கல்லூரி


## வட மாகாண விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்

- நீர் இறைக்கும் பம்புகள் (மின்சாரத்தில் இயங்குவன).
- நீர் இறைக்கும் பம்புகள் (மண்ணெண்ணெயில் இயங்குவன)
- களைக் கொல்லிகள் எம். சி. பி. ஏ; 3-4 டி. பி.ஏ
- கிருமிநாசினி
- பங்கசு தடுப்பு மருந்து வகைகள்
- யந்திர தெளி கருவிகள்
- கை தெளிப்பான்கள்
- உரக்கலவைகள்
- பம்புகள், தெளிகருவிகளுக்குரிய உதிரிப்பாகங்களும்

மற்றும்

பம்ப், தெளிகருவிகள் திருத்தும் வசதிகளும்
மிகக் குறைந்த விசேட விலையில் கிடைக்கும்.

மார்க்பெட் 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 504. 0693

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நாளை நமதே

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
ஒரு தாய்மக்கள்

Rio (Jaffna)
Daily 4 Sho ws
G na
in
THE YOUNG REBEL
CERVA TES

தினசரி 4 காட்சிகள் கடைசி சில தினங்கள்
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி
[யாழ். நகர்]
எஸ். எஸ். ஆர்- விரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி-ராஜம்
நடித்த
சிவகெங்கைச் சீமை புதிய பிரதி

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வந்தாளே மகராசி
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ
[யாழ். நகர்]
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா!

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெமினி - சாவித்திரி
நடித்த
பந்த பாசம் (புதிய பிரதி)!

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
6-வது வெற்றி வாரம்
ஓ சிவராம் ஓ சந்திரகலா ஓ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

2-வது ஹவுஸ் புல் வாரம்!
ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு
நடித்த
(இரு வேடங்களில்)
(புத்தம்
சபாஷ் மீனா
புதிய பிரதி)

REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
SPECIALIST
Full action Film

HOUSE FULL! HOUSE FULL!! HOUSE FULL!!!
சாந்தி
(யாழ்நகர்)
போன்: 7642
10-00, 2-45, 5-15, 7-30, 10-00
இரசிகர்களின் வசதியை முன்னிட்டு சனி, ஞாயிறு
தினசரி 5 காட்சிகள்
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)
'பிளட்மணி' அதிசிறந்த கராட்டிச் சித்திரம்

## அன்புத்தோழன்..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தது. விக்கிரமன் வியப்புடன் அம்மாளிகையைப் பார்த்தான். சுவர்களில் அழகான சித்திரங்கள் வரையப்பட்டு இருந்தன. தூண்களில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தன. நிலத்தில் பட்டுக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன.

மாளிகையை அடைந்ததும் வனமோகினி சுயரூபமடைந்தாள். அவள் விக்கிரமனை அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றாள்.

அந்தப்புரத்திலிருந்த அழகிய குளத்தில் குளித்த விக்கிரமனுக்கு அறுசுவை உணவுகளைப் படைத்தாள் வனமோகினி.

வயிறார உண்ட விக்கிரமனுக்கு நித்திரை வந்தது. சயன மண்டபத்திலிருந்த கட்டிலொன்றில் படுத்தான், கட்டிலைச் சுற்றிவரநின்ற பணிப் பெண்கள் சாமரை வீசினர். சொகுசான மெத்தையும் இதமான காற்றும் அவன் கண்களை வருடின. அவன் தன்னை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்தான்,

திடீரென்று அவனை ஏதோ அமுக்குவது போலிருந்தது. விக்கிரமன் திடுக்கிட்டுத் துடித் தெழுந்தான். அவனெதிரே பயங்கர உருவம் ஒன்று நின்றது.

மலையைப்போன்று பருத்த உடல், பெரியதலை, அதில் இரண்டு கொம்புகள், உரலைப் போன்ற நான்கு கைகள், விரல்களில் கத்தியைப் போன்ற கூரிய நகங்கள், பருத்த வயிற்றின் மத்தியில் பூசனிக்காயைப் போன்ற பெரியதொருகண் இருந்தது.

விக்கிரமன் வாளை உருவ கையை இடையருகே கொண்டு சென்றான். அதைக் கவனித்த அந்தப்பயங்கர உருவம் லபக்கென்று அவனைப் பிடித்துக் கொண்டது. விக்கிரமன் அதன் பிடியிலிருந்து விடுபட திமிறினான். அதன்பிடி இளகியது. விக்கிரமனுக்கு உடல் எல்லாம் பற்றி எரிவதுபோல் வேதனையாக இருந்தது.

''விக்கிரமா நான்யார் தெரியுமா...? கொள்ளிக்காடனின் தங்கை. உன்னை யாரென்று தெரியாததால் தான் உதவி செய்தேன். ஆனால் நீயோ என் அண்ணனைப் பழிவாங்கப் போகிறேன் என்றாய். அதனால் தான் உன்னைத் தந்திரமாகக் கடத்திவந்தேன்.'' என்று கூறி கெக்கலி கொட்டிச் சிரித்தாள். அந்த மாளிகையே கிடுகிடுத்தது.

விக்கிரமனின் உடலில் பூகம்ப நடுக்கம். அவன் தன்னைச் சுதாகரிக்குமுன் கொள்ளிக்காடனின் தங்கை, தன் கூரிய நகங்களால் விக்கிரமனது முகத்தை பிறாண்டினாள்.

விக்கிரமன் பயங்கரமாக அலறினான். அவனது முகத்திலிருந்து தசை கிழிந்து தொங்கியது,

(அடுத்த எண்ணக்கில்)

## யாழ் கடல் ஏரியில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து கீழ் இறங்கும் முகிலும் கொந்தளிக்கும் நீரும் சேரும் போது நீர் கொண்ட புனல் வடிவம் அமைகின்றது. கீழ் இறங்கும் முகிலிலிருந்து படிப்படியாக மறை வெப்பம் வெளியேறுவதால் அது நீர் உருவம் பெறுகின்றது எனலாம். ஆகவே பொதுவாகக் கூறினால் நீர்த்தம்பம் என்பது புனல் வடிவ அமைப்புடைய நீர் இறங்கும் நிலை என்றே கூறலாம். இவ்வமைப்பு நீர்ப்பரப்பிலிருந்து திரண்ட மழை முகிலின் அடித்தளம் வரை உருவாகலாம். உண்மையில் காற்றுத் தொகுதியின் நடுப்பகுதிக்குள் காணப்படும் அமுக்கம் சுற்றிவர உள்ள பரப்பின் அமுக்கத்திலும் பார்க்கக் குறைந்து காணப்படுவதாலும் சுழலுகின்ற இந்நிலை குழாய் போன்ற அமைப்பை உருவாக்குவதாலும் நீர்த்தம்பம் ஏற்படுகின்றது. முன் கூறியது போன்று, இந்நிகழ்வு ஐக்கிய அமெரிக்காவின் மத்தியபகுதி, மேற்கு ஆபிரிக்காப் பகுதி, மத்தியதரைக் கடற்பகுதி ஆகியவற்றில் ரொனடோப் புயல்களுடன் சேர்ந்து அவதானிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் இது அடிக்கடி நிகழ்வதில்லையென்று கூறலாம். ஆனால் குறிப்பிட்ட பிரதேசத்துக்குரிய அமுக்க வேறுபாட்டாலும் திடீரென்று ஏற்படும் வளிமண்டல உறுதியற்ற நிலை காரணமாகவும் இவ்வாறான நீர்த்தம்பம் ஏற்படுவது சாத்தியமாகும். ஆரம்பத்தில் செங்குத்தாக ஏற்படும் நீர்த்தம்பம், பின்பு செங்குத்தான காற்று ஒதுக்கம் காரணமாக வளைவான தோற்றத்தைப் பெற்று படிப்படியாக மறைந்துவிடுகின்றது.

பொதுவாக இந்நீர்த்தம்பங்களின் விட்டம் சில மீற்றர் அளவு தொடக்கம் நூற்றுக்கணக்கான மீற்றர் தூரம் வரை அமையலாம். இந்நீர்த்தம்ப நிகழ்வின் காலம் ஆகக்கூடியது அரை மணித்தியாலமாகவே இருக்கும். இந்த நேரத்துக்குள் ஏற்படுகின்ற செங்குத்தான காற்று ஒதுக்கம், வெப்பநிலை மாற்றம், வளிமண்டல உறுதி நிலைமாற்றம், முகில் படையின் நீர் கொள்ளும் நிலைமாற்றம் ஆகியவற்றால் இல்லாமல் போகின்றது.

## நல்வினையே...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலால் உயர்ந்த குறிக்கோளுடன் விளங்கிய உயர்ந்தவனாக வேண்டும்.

''செய்குவம் கொல்லோ
நல்வினை எனவே
ஐயம் அறார் கசடு ஈண்டு
காட்சி
நீங்கா நெஞ்சத்து துணிவு
இலரே
யானை வேட்டுவன் யானை
யும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன்
வெறுங்கையு வருமே
அதனால்''

### புகழுக்குவழி

நல்வினை செய்வோர் அந்த வழியில் உறுதியுடனும் உண்மையாகவும் முயலவேண்டும். அவர்களுக்கு சுவர்க்கபோகம் கைகூடும். அது இல்லையெனில் மாறி மாறிப் பிறக்கும் பிறப்பாவது இல்லாமற்போகும். சுவர்க்க போகத்திலும், மாறிப் பிறப்பதிலும் நம்பிக்கை அற்றவர்களாயின் இமயம் போன்ற உயர்ந்த புகழாவது கிடைக்கும். ஆகவே எவ்வாற்றாலும் நல்வினைகளை செய்வதே நன்று என்க் கூறுகிறார் கோப்பெருஞ்சோழன் என்னும் புலவர்;

சுவர்கம் முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவர்களும் தாம் பிரத்தியட்சமாய்க் காணும் புகழை விரும்பியாவது நல்வினைகளைச் செய்யத் தூண்டுகிறார் புலவர். புகழ் விரும்பினும் செய்யும் நல்வினைகளே படிப்படியாகச் சென்று சுவர்க்கத்தைக் கொடுக்க வல்லது ஆதலின்,

எவ்வழியில் நின்றாலும் வாழ்க்கையின் எந்த நிலையிலும் அறமும் அருளும் வலியுறுத்தப்படுவது தமிழ் இலக்கியத்தின் ஒரு சிறப்பாகும்.

''செய்வினை மருங்கில் எய்
தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்
சியும் கைகூடும்
தொய்யா உலகத்து நுகர்ச்
சியும் இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மை
யும் கூடும்
மாறிப் பிறவார் ஆயினும்
இமயத்துக்
கோடு யார்ந்தன்ன தம்
மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்
தல் தவத் தலையே''
—புறநானூறு

## நடிப்புக்...

7-ம் பக்கத் தொடர்ச்சி)

களாக மாற்றி விடுகின்றது. இயற்கையோடு இசைந்த அங்க 'அசைவு'களை மறந்து விடுகிறார்கள். அத்தோடு அழகியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் சாதனங்களை மறுதலிக்கும் எண்ணக்கருவலுப் பெற்றிருக்கும் சமூக அமைப்பில் பொருத்தப்பாடு உடையவர்களாக வாழ நாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்!

திறமையான நடிகன், உணர்வுகளைத் தன் நடிப்பின் மூலம் வெளிக்கொணரக் கூடியவனாக இருக்கவேண்டும். ஆகவே நடிகன் சகல கலைகளினதும் குணவிசேஷங்களை தன்னுள் அடக்கியவனாகத் திகழ வேண்டும்.

உணர்திறன், கற்பனை, கவனம், அவதானம், இசைவர்க்கம், ஒலி, மொழி, உடல்வளம் ஆகியன நடிகனுக்கு அவசியம். பயிற்சி மூலம் இயற்கையான இத்திறன்கள் வளர்ச்சியடைகின்றன

(தொடரும்)

## முல்லைத்தீவில் மின்விநியோகம் மக்கள் அதிருப்தி

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு பட்டண சபையால் வழங்கப்படும் மின்விநியோகம் பாரபட்சமற்ற முறையில் வழங்கப்படுவதில்லையென கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மின்யந்திரக்கோளாறு காரணமாக இயங்காமல் இருந்த யந்திரம் திருத்தப்பட்டு திரும்பவும் மின்சாரம் வழங்கப்படுவதாகவும் இவ்வாறு வழங்கப்படும் மின்சாரம் ஒருசில இடங்களுக்கு மட்டும் வழங்கப்படுவதாகவும் கடைகளுக்கோ மக்கள் அதிகம் பாவனை செய்யும் வீதிகள் பஸ்தரிப்பு போன்ற இடங்களுக்கோ வழங்கப்படாததையிட்டு மக்கள்கவலை கொண்டுள்ளனர் வர்த்தகர்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனராம்.

இரவு 11 மணிவரையும் மின்சாரம் வழங்கப்படுவதால் அரசினர், தனியார் வைத்தியசாலையில் உள்ள நோயாளர் பெரும்கஷ்டம் அடைந்துள்ளனர்.

## ஒவ்வாமை

(அலெர்ஜி)

ஒவ்வாமை நோயானது இன்று உலகமெங்கும் மருத்துவர்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறது அதாவது ஒத்துவராதது என்பதுதான் அதன் விளக்கமாகும். இதனால் ஆண்டுதோறும் முக்கியமாக குழந்தைகள் பீடிக்கப்படுகிறார்கள்.

ஈழை, நிண நீர் வியாதிகள், சிறுநீர் சம்பந்தப்பட்ட வியாதிகள், இரத்த நாளக் கசிவு போன்றவை ஒன்றுடன் ஒன்று வேறுபட்டாலும் சில மருந்துகளாலும் ஏதாவது ஒரு உணவுப்பொருள் உடலுக்கு ஒத்துவராவிடினும், சில தொற்றுகளாலும், சில புரதப்பொருட்களாலும், தூசி, மகரந்தம் போன்றவையாலும் குருதி நஞ்சூட்டப்படுவதாலும் இந்நோய் ஏற்படுகின்றது.

சிலருக்கு ஒத்துவந்த சில உணவுகள் சில காலங்களின் பின் ஒத்துவராதிருக்கலாம். அதாவது அவர்களின் உடல் எதிர்ப்புச் சக்தி குறைந்து பலவீனப்பட்டால் ஒத்துவந்த உணவே ஒவ்வாது இருக்கலாம்.

சுரம், உடலெங்கும் தடிப்புகள், சில சமயம் கை, கால்கள் வீக்கம், அரிப்பு என்பன முக்கிய குணங் குறிகளாகும். குழந்தைகள் வேதனையால் அழவும் கூடும். மலச்சிக்கல் உண்டாகலாம். பெரும்பாலும் தொற்றுநோய்கள் போன்றவற்றால் குருதி நஞ்சூட்டப்படுவதால் இந்நோய் ஏற்படுகின்றது.

பெரும்பாலும் இந்நோயினால் பீடிக்கப்படுபவர்கள் காரணத்தை அறிந்து அதை விலக்கவேண்டும். அதாவது ஒவ்வாத உணவைத் தவிர்க்கவேண்டும். பொதுவாக இறால், கருவாடு, நண்டு, அன்னசி, தக்காளி கத்தரி என்பனவற்றை இந்நோயாளி தவிர்க்கவேண்டும், மலச்சிக்கல் இல்லாது கவனிக்கவேண்டும். சிறுநீர் தாராளமாகக் கழியவேண்டும். பொதுவாக இந்நோய் ஏற்பட்டதும் வைத்தியரிடம் சிகிச்சை பெறுவது சாலச் சிறந்தது.

டாக்டர்
இந்திரா தர்மலிங்கம்

# வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கூட்டணியினரின் பங்களிப்பு

## நல்ல யோசனைகளுக்கு நிதியமைச்சரே பாராட்டினர்

எஸ்- எம். கோபாலரத்தினம்

இந்தோனேஷியர் ஹஜ் யாத்திரிகர்களின் விமானவிபத்து, மட்டக்களப்பு, கல்முனை உட்பட நாட்டின் சில பகுதிகளில் இலங்கையின் சமீபகால வரலாற்றில் கண்டும் கேட்டுமிராத சூருவளி, வெள்ளப் பெருக்கின் கோரத்தாண்டவம் ஆகியவை காரணமாகவோ என்னவோ இம்முறை வரவு- செலவுத்திட்ட விவாதம் பொதுவாகவே விறுவிறுப்பின்றி இருந்தது.

அரசாங்கத்துக்கு மிகப் பெரும்பான்மைப்பலம் இருக்கிறது. சபையில் ஆளும்கட்சி உறுப்பினர்களே அதிகம். வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் தொகை குறைவு. வரவு- செலவுத்திட்ட விவாதம்தான் இப்போது அங்கத்தவர்கள் எல்லோரும் பேசுவதற்குள்ள ஒரு சந்தர்ப்பம். சபையில் பேசாத அங்கத்தவர்களும் பேசுவதற்குள்ள சந்தர்ப்பங்கள் இரண்டிருந்தன. ஒன்று சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம்; மற்றது வரவு- செலவுத்திட்டத்தின் மீதான விவாதம். இப்போது வரவு- செலவுத்திட்ட விவாதம் மட்டுமே ஒரே சந்தர்ப்பமாகையால் எல்லா உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும். பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆளும்கட்சியினராக இருப்பதால் அவர்கள் வரவு- செலவுத் திட்டத்தை வரவேற்றும் நிதியமைச்சரைப் பாராட்டியும்தான் பேசுவார்கள். குழுநிலை விவாதத்தில் தங்கள் தொகுதிகளின் குறைகளையும் இதர குறைகளையும் பொதுவாக எடுத்துச் சென்னாலும் விவாதம்- சூடுபிடிப்பதற்கு இடமிருக்காது.

இந்தமுறை வரவு-செலவுத் திட்டவிவாதத்தில் முன்னைய ஆளும் கட்சியினரான சிறிலங்கா சுதந்திரக்கட்சி பழைய பெருந் தலைகள் அதிக அக்கறை காண்பித்ததாகத் தெரியவில்லை. புதிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆளும் கட்சிப் பின்னாசன உறுப்பினர் சிலரின் குறுக்கீடுகளுக்கும் ஈடுகொடுத்த போதிலும், சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையில் வரவு— செலவுத்திட்ட விவாதத்தில் உற்சாகத்தோடு பங்குபற்றியதென்று சொல்ல முடியாது.

ஆட்சிமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் தமிழர் கூட்டணி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சியின்பின் உறுப்பினர் சிலர் சில சமயங்களில் குறுக்கீடுகளும் கிண்டல்களும் செய்தபோதிலும் நல்ல முறையில் பங்குபற்றி சில நல்ல யோசனைகளையும் தெரிவித்துள்ளதாக அவர்களை நிதி அமைச்சரே சபையில் பகிரங்கமாவே பாராட்டியிருக்கிறார்.

மிகப் பெரும்பான்மைப் பலம் வாய்ந்த கட்சி ஆட்சி பீடத்திலிருப்பதால் விழிப்பும் உறுதியும் கொண்ட எதிர்க்கட்சி மிக அவசியம் என்று வரவு- செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மானிப்பாய்த் தொகுதிப்பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் சரிவாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

வரவு- செலவுத்திட்ட விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ்ஈழக் கோரிக்கை மீதும் இரண்டு பக்கத்திலிருந்தும் கருத்துக்கள் கிளம்பின.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது பிரிவினைக் கோரிக்கையை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்காக அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று ஆளும் கட்சியைச் சேர்ந்த முன் ஆசன உறுப்பினர் சிலர் தொடக்கம் பின் ஆசன உறுப்பினர் பலர் வரை வேண்டுகோள் விடுத்தனர்.

இது மட்டுமல்ல தமிழர்விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் அரசாங்கம் வழங்கிய ஜீப் வண்டிகளை உபயோகிப்பது தொடக்கம் எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் வெளிநாட்டு விஜயத்தின் போது பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டிவரை இந்த வரவுசெலவுத்திட்டத்தில் விவாதிக்கப்பட்டதென்றே சொல்ல வேண்டும்.

முன்னைய அரசாங்கக் காலத்திலிருந்தது போன்றே சமீபத்திலும் தமிழர்விடுதலைக்கூட்டணி உறுப்பினர் சிலபிரச்னைகளை எடுத்துக் கூறத்தொடங்கியதும் சில பின்னாசன உறுப்பினர்கள் கூச்சலும் கிண்டலும் செய்து திசைமாற்றி எதையும் வெளியே கேட்காமல் செய்யும் பழக்கத்தைப் பின்பற்றத் தொடங்கியிருந்தார்கள்.

வரவு-செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதம் முடிவுக்கு வரும் சமயத்தில் நிதியமைச்சர் பதிலளிப்பதற்கு முன்னர் சபையின் மரபுப்படி எதிர்க்கட்சித் தலைவர் பேச எழுந்தார்.

அவர் எழுந்ததுமே ஓர் உறுப்பினர் இந்தப்பத்திரிகையைக் காட்டி, அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிக்குப் பதில்சொல்ல வேண்டுமென்று சொன்னதுமே பின்னாசன உறுப்பினர்கள் கூச்சலிடத் தொடங்கினர்.

அந்தக் கூச்சலுக்கெல்லாம் மேலாக உரத்தகுரலில் இதை நான் எதிர்பார்த்தேன் என்று கூறி "இதுதான் உங்கள் ஜனநாயகமா, நீங்கள் சொல்லும் தார்மீகம் இதுதானு' என்று கேட்டு மடக்கிச் சபையில் சபாநாயகர் அமைதியை நிலைநாட்டி இரண்டேகால் மணிநேரம் தண்ணீர் கூடக் குடிக்காமல் பேசி முடித்தார் அவர்.

இந்த வரவு-செலவுத்திட்ட விவாதம் அரசாங்கத்துக்கும் கூட்டணிக்குமிடையில் ஒரு சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துமென்ற நம்பிக்கையைச் சில சமயங்களில் உருவாக்கியிருக்கிறது, குழு நிலைவிவாதத்தின் போக்கு எப்படியிருக்கிறதோ?

---

‘ஈழநாடு’ ஆதரவுடன் ரோட்டரி ஆரம்பித்த

# சூருவளி, வெள்ள நிவாரண நிதி

சூருவளி வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்காக யாழ்ப்பாணம் ரோட்டரிச் சங்கம் ‘ஈழநாடு’ ஆதரவுடன் நிதியொன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் சேகரிக்கப்படும் பணம் சூருவளியினுல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள ரோட்டறிச் சங்கங்களிடம் உடனடி உதவிகளை செய்யும்பொருட்டு கையளிக்கப்படும்.

இந்நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள்

‘ரோட்டரிச் சங்கம் யாழ்ப்பாணம்’
மே | பா. ஈழநாடு லிமிட்டெட்
த. பெ. எண். 49,
யாழ்ப்பாணம்,

என்ற முகவரியிட்டு காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கொடுப்பனவுகள் யாவற்றுக்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

இந்நிதி சேகரிப்பு 10-12-78ம் திகதியுடன் முடிவடையும்.

இதுவரை கிடைத்த தொகை ரூ. 4860-00

மாறு:

| | ரூ. ச. |
|---|---|
| ரொட்டேரியன் டாக்டர் வி.விபுலேந்திரன் | 101-00 |
| பொலிகிளிக் ஸ்தாபனம் யாழ்ப்பாணம் | 101-00 |
| சட்டத்தரணி சி. சி. சோமசேகரம் ஜே. பி. யு. எம். | 101-00 |
| Dr. B. S. பாரதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 250-00 |
| S. T. தணிகாசலம் 17/7, ஐயனர்கோவிடி, யாழ்ப்பாணம். | 25-00 |

கரவெட்டி மத்தி மக்கள் அன்பளிப்பு வருமாறு:

ரூ. 25 உதவியவர்
திருமதி எஸ். கே. பிள்ளை பொன்னம்பலம்,

ரூ. 10 உதவியவர்
வி. கனகசபை, சு. முருகப்பர், வே. மயில்வாகனம், சி. சின்னத்தம்பி, மு. கதிரவேலு, க. கைலாசபதி, இ. ஜெயவீரசிங்கம்,

ரூ. 5 உதவியவர்
வே. ஆறுமுகம், சின்னையா, க. செல்வரத்தினம், க. சச்சிதானந்தம், ந. ஜெயபாலன், சி. சிவபாலன், சி. தங்கராசா, க. முருகேசு, வ. இராசையா, தா. பாலசிங்கம், ச. சிவாஜி, சி. சிதம்பரநாதன், சி. வேலுப்பிள்ளை, க. பாலகிருஷ்ணன், க. சோதிலிங்கம், செ. நடராசா, க. நடராசா, சி. இராசதுரை, மு. மார்க்கண்டு, சி. இளையதம்பி, வ. கந்தசாமி, சி. சுப்பிரமணியம், வே. புஷ்பநாதன், வீ. கதிரமலை, A. D. P. நந்தாவதி மெனிக்கே, ந. ஞானேஸ்வரி, பா. தம்பையா, வீ. கதிரித்தம்பி, எஸ். கணேசன், க. வைத்திலிங்கம், க. குமாரசாமி.

ரூ. 3 உதவியவர்
வேலுப்பிள்ளை, ஏ. சின்னத்தம்பி.

ரூ. 2 உதவியவர்
கே. சண்முகரத்தினம், சு, நவரத்தினம், ஆ. கிருஷ்ணபிள்ளை, சி. வளவன், இளையதம்பி, நாகலிங்கம், க. வேலுப்பிள்ளை, செல்வராசா, நல்லதம்பி, க. சுப்பிரமணியம், தி. சிவானந்தன், கு. கணேசமூர்த்தி.

ரூ. 1 உதவியவர்
கி. கிருஷ்ணபிள்ளை, சின்னத்தம்பி, பொன்னுத்துரை, வேலுப்பிள்ளை, செல்லையா, கந்தசாமி, வே. கணேஷ், கா. சிற்றம்பலம்.

மொத்தம் ரூபா 318-00

---

## சூருவளி அகதிகளுக்கு தைத்த ஆடைகள்

(நீர்வேலி)

வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம் சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ‘4000 ரூபா பெறுமதியான தைத்த ஆடைகளை ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சம்மேளனத்திடம் கையளித்துள்ளது. மேற்படி சங்கப் பணியாளர்கள் தமது ஒருநாள் சம்பளத்தையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முடிவுசெய்துள்ளனர். (கெ)

---

## காரைநகர் வார்தா குருகுலம் அளிக்கும் கல்வி வசதி

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தன்னம்பிக்கையில் வளரவும் யாழ்நகரன்கல்லூரிக்குச்சென்று கல்வி பயிலவும் காரைநகர் வார்தாக் குருகுலம் வசதியளிக்கிறது.

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனர்ஞாபகமாக 3 மாணவர்களும் இராமநாதன் ஞாபகமாக தீவுப் பகுதி மாணவர் ஒருவரும் ஸ்ரீமதி மாணிக்கம் ஞாபமாக மலைநாட்டு மாணவர் ஒருவரும், காந்தீய பொருளாதார நிபுணர் ஸ்ரீ குமரப்பா ஞாபகமாக இந்திய வம்சாவளி மாணவர் ஒருவரும் மேற்படி குருகுலத்தில் இருந்து படிக்க நிதி வழங்கப்படுகிறது. விரும்பியவர்கள் மேற்படி குருகுலத்தலைவருக்கு உடனடியாக மனுச்சேய்யும்படி கோரப்படுகிறர்கள்.

---

## விற்பனைக்கு

இயக்கச்சி கிருஷ்ணர்கோயில் அருகாமையில் சிறு காடு அடங்கிய 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு, தென்னை, மா, பலா செய்கைக்கு உகந்தது. விபரங்களுக்கு விளம்பர இல:0964, மே/பா "ஈழநாடு," யாழ்ப்பாணம். 0964

---

## அறிவித்தல்

### மின்விநியோகம்

லக்ஸபான/பொல்பிட்டிய நீர்மின்விநியோக வேலைகள் பூர்த்தியாகியுள்ளதால், இன்றிலிருந்து யாழ். கிளிநொச்சிப் பிரதேசங்களுக்கு மின்விநியோகம் வழமைபோல் நடைபெறும்.

மின் விநியோகம் தடைப்பட்டிருந்த காலங்களில் எங்களுடன் பொறுமையாக ஒத்துழைத்தமைக்கு பொதுமக்களுக்கு நன்றி செலுத்துகின்றோம்.

மின்பொறியியலாளர்
யாழ். பிரதேசம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம். 0669

---

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No 49, Telegram Eelanaadu Telephone: 880, Registered as a Newspaper in SriLanka